ஸ்ரீ

# வடரங்க ஸ்தலபுராணம்

(வடமொழி சுலோகமும் தமிழ் உரைநடையும்)

இது

சீகாழி வித்வான் திரு. D. சுந்தரேச ஆச்சாரியாரால்

வடமொழியிலிருந்து

மொழி பெயர்க்கப்பெற்று,


ப. சுப்ரமணியன், I.A

இந்து அறநிலையத்துறை ஆணை

களின் நினைவாக அன்பளிப்பு

அளிப்பவர்:

இராஜப்பா நகர், * தஞ்சா


சீகாழி ஸ்ரீமான் C. ஸ்ரீநிவாசமுதலியார் அவர்களின்

விருப்பத்தின்படி

ஷை தேவஸ்தான பரிபாலகர்களால்

தேவஸ்தான நிதியைக்கொண்டு


சீகாழி ஸ்ரீ அம்பாள் பிரஸில் அச்சிடப்பெற்றது.

காப்பி 250] 1943 [விலை அணா 8.

# முகவுரை.

உலகத்தில் மிகப் புராதனமாகத் தமிழ்மக்கள் பாராட்டி வந்த வழக்கங்களுள் ஆலய வழிபாடே தலைசிறந்ததாகும். ஆலயம் என்பதற்கு ஆன்மாக்கள் ஒடுங்கும் இடம் என்பது பொருள். அதாவது உலகியல் நெறி ஒன்றிலேயே தம் வாழ்க்கையைச் செலுத்தி உழலாநிற்கும் மக்களைச் சன்மார்க்கமாகிய பக்தி நெறியிலும் ஈடுபடச்செய்து கடவுள் நிலையோடு ஒன்றச்செய்யும் பேரின்ப வாழ்வை அளிக்கத் துணை பயப்பது ஆலயமாகும். அணுவுக்கு அணுவாய் உயிருக்குயிராய்த் தோன்றாத்துணையாய் எங்கும் வியாபித்திருக்கும் இறைவன் ஆன்மாக்களுக்கு நேர்முகமாக அருள் புரியும் திருவருள் நோக்கங் கொண்டு பல்வேறு நாம ரூபத்தோடு எழுந்தருளியிருக்கும் தலமே புண்ணியத் திருப்பதியாகும்.

இம் மகிமையை உணர்ந்தே பண்டைக் காலத்தில் தமிழ் அரசர்களும் வள்ளல்களும், நாடு நகர்தோறும் ஆலயம் நாட்டலையும் அதனைப் பரிபாலிப்பதையும் தலைசிறந்த தருமமாகக் கொண்டு நூற்றுக்கணக்கான தேவாலயங்களை நிலைநாட்டியும், அதற்கென்று மானியம் ஏற்படுத்தியும், மூர்த்தி, தல, தீர்த்த மகிமையைத் தெரிவிக்கும் புராணங்களை இயற்றுவித்தும் நிர்வாகம் செய்துவந்தனர். மக்கள் வழிபாட்டுமுறை ஒன்றினாலேயே இக பர சாதனங்களை எளிதில் அடைந்து உய்வதற்கு ஆலயம் ஒவ்வோர் ஊர்தோறும் இருப்பது இன்றியமையாததாகும். ஆலயம் இல்லா ஊரை அடவி காடு என்றதும் இது நோக்கியே போலும். மக்கள் உறையும் இல்லங்களைப் போலன்றி எந்நாளும் நிலைத்திருந்து யாவரும் உய்ய அருள்செய்யுமாறு ஆலயங்களைக் கல்லால் எடுப்பித்த முன்னோரது அறிவுத்திறன் ஆய்தற்பாலது.

ஸ்ரீமந் நாராயணமூர்த்தி விசேஷமாக வீற்றிருக்கும் நூற்றெட்டுத் தலங்களுள் முதன்மையானது ஸ்ரீரங்கமே. அத்தகைய ஸ்ரீரங்கமாகிய தென்னரங்கத்தைப் போன்று விசேஷ மகிமை பெற்று விளங்குவது வடரங்கமாகிய இத்தலமாகும். அரங்கம் என்பது ஆற்றிடைக்குறை. அது தன்னிருபாலும் ஆறு பிரிந்து போக நடுவிலுள்ள தீவாகும். இம்முறையில் இத்தலமும், கொள்ளிடமும் அதன் பிரிவினதாகிய ராஜன் ஆறும் ஆகிய இரண்டாற்றின் மத்தியிலுள்ளதாகும். வட விருட்சம்பெற்று அதில்பள்ளி கொள்ளுமகிமையால் வடரங்கம் எனப் பெயர்பெற்றது. ஸ்ரீரங்கத்திற்கு வடதிசையில் உள்ள காரணத்தால் இப் பெயர்பெற்றது எனினும் அமையும். இத்தலம் ஸ்ரீரங்கப்பட்டினம், ஸ்ரீரங்கம் அப்பாலரங்கம், பரிமளரங்கம், வடரங்கம் என்னும் பஞ்ச அரங்கக்ஷேத்திரத்துள் ஒன்றாய், பெருமான் அரவணையில் பள்ளிகொள்ளும் கோலத்துடன் எழுந்தருளும் பெருமை பெற்றதாகும். ஸ்ரீரங்கம்

போலவே ஜம்புகேசுவரர் ஆலயத்தையும் ஒருங்கு பெற்றிருப்பது பாராட்டற்பாலது.

எந்தத் தலமாயினும் அத்தலத்தின் சிறப்பைப் பலவாறு விரித்துரைக்கும் புராணம் ஒன்றைப் பெற்றிருக்கவேண்டும். புராணத்தைக் கொண்டே ஸ்தல வரலாறு முழுமையும் அறிய முடியும். எனவே புராணத்தைத் தல வரலாற்றுக் கண்ணுடி என்று சொல்வது மிகையாகாது. இதைக் கருதியே முன்னோர்கள் ஆலயம் அமைப்பதோடு அதற்குரிய புராணத்தையும் தக்காரைக் கொண்டு இயற்றி வந்தனர் போலும். எனவே புராணமாவது, மூர்த்தி தல தீர்த்த மகிமை, வழிபாட்டுத்திறன், வழிபட்டோர் சிறப்பு, நித்திய நைமித்திக பூசைத்திறன், வழிபடுதலாகிய இருமைப்பயன் முதலியவற்றைத் தெளிவாக விளக்கும். தலத்தின் விசேஷம் தெரிந்துகொண்ட பின்னரே அத்தலத்தை வழிபட வேண்டும் என்ற நோக்கம் மக்கட்கு உண்டாமாகலின் ஒவ்வொரு தலத்திற்கும் புராணம் இருப்பது இன்றியமையாததாகும்.

இம்முறையில் இந்தத் தலமும் பவிஷ்யோத்தர ஆகமத்தினின்றும் தக்க அறிஞரால் எழுதிய (285) சுலோகங்களையும் 8 அதிகாரங்களையும் உடைய வடமொழிப் புராணம் ஒன்றைப் பெற்றிருந்தது. இது வடமொழியில் இருந்த காரணத்தால் பலர்க்கும் பயன்படாததையறிந்து தமிழில் வசன நடையில் வெளியிட வேண்டும் என்ற நோக்கங் கொண்டு தற்போது இவ்வாலயத்தின் டிரஸ்டியாய் விளங்கும் **சீர்காழி ஸ்ரீமான் C. ஸ்ரீநிவாச முதலியார்** அவர்கள் இட்ட பணியை மேற்கொண்டு கோயில் உருவப்படங்கள் இணைத்து உரைநடையில் எழுதினேன். அரங்கநாதனைப்பற்றிய ஆழ்வார்கள் திருமொழிகள் சிலவற்றையும் வடரங்க நாதர் பதிகம் ஒன்றையும் இந்நூலின் இறுதிக்கண் சேர்த்துள்ளேன்,

**இந்துமத பரிபாலன சபையாரின்** விருப்பத்தின்படி முதலியார் அவர்கள் ஆலய நிர்வாகப் பொறுப்பாளர் என்ற முறையில் உள்ளந் தூயராய், ஒழுக்க சீலராய், குலவொழுக்கம் குன்றாக் குணாளராய், தெய்வ சிந்தனை யுடையாராய், ஆலயத்திற்கு அவ்வப்போது வேண்டும் காரியங்களை ஆய்ந்து செய்யும் நோக்கம் கொண்டு இப் புராணம் வெளியிடத் தூண்டியதற்கு என் நன்றியை அறிவித்துக்கொள்ளுகிறேன். முன்னே வடமொழி சுலோகமும் பின்னே உரைநடையும் அமைய மொழிபெயர்ப்புக்கு உதவியாயிருந்த மன்னார்குடி வித்வான் வாமனநாராயணாச்சாரியார் அவர்களுக்கும் என் நன்றி உரித்தாகுக.

" ஆலயம் தொழுவது சாலவும் நன்று "

சீகாழி,
19—6—43.

**வித்வான், D. சுந்தரேசன்,**
[தமிழாசிரியன்.



OLD TEMPLE RUINED BY FLOODS.



TEMPLE PRESENT VIEW



SIVA TEMPLE



श्री गुरुभ्योनमः ॥ श्री वटरंगमाहात्म्य प्रारंभः ॥

श्रीः ॥ कदाचिन्नैमिषारण्यमागतं मुनिपुंगवम् ।
ब्रह्मण्यंचमहात्मानं वेदवेदाङ्गपारगम् ॥ 1

सूतं क्षेत्रविदांश्रेष्ठंक्रतुमध्ये समागतम् ।
विधिना तं सुसंपूज्य त्वर्घ्यपाद्यविभूषणैः ॥ 2

कुशलं शौनको पृच्छन्भत्वानन्दपरिप्लुतः ।
पप्रच्छ वदतां श्रेष्ठः प्रातस्सवनतः परम् ॥ 3

शौनकः॥ ब्रह्मपुत्रमहाभागज्वलन्मुखद्विजोत्तम ।
क्षेत्रबृन्दप्रभावज्ञनदीनदविचक्षण ॥ 4

वैकुण्ठस्थोपदेशेन पालयखाद्य सन्मते ।
क्रत्वन्तरे केशवस्य माहात्म्यश्रवणात्सकृत् ॥ 5

न्यूनातिरेकदोषंच विनाशं याति नान्यथा ।
इतिश्रुतं नारदेन गङ्गातीरे द्विजोत्तम ॥ 6

तस्मान्नः पावयक्षिप्रं यतस्त्वं क्षेत्रवित्तमः ।
वक्तुमर्हसिमाहात्म्यं विष्णोरद्याऽत्रसंसदि ॥ 7

इत्युक्तोहृष्टपुष्टाङ्गः सूतः स्सर्वपुराणवित् ।
प्रोवाचशौनकं विष्णुकथामृतपरायणम् ॥ 8

साधुसाधु महाभाग मतिस्ते विमलाशुभा ।
यज्ञाताऽच्युतमाहात्म्यश्रवणे ऋषिसत्तम ॥ 9

अतस्त्वमेव सुकृती अतस्त्वं धन्य एवच ।
यः श्रुणोति रमेशस्य कथासारं चपावनम् ॥ 10

यज्ञेवा चोत्सवे वापि पुण्यक्षेत्रेनदीतटे ।
देवद्विजसमूहे वा स याति परमां गतिम् ॥ 11

श्रियं विद्यां जयंचैव कीर्त्तिमायुः परं वसु ।
पुत्रपौत्रसमृध्दिंच प्राप्नोतिनच संशयः ॥ 12

ब्रह्महत्यादिपापानां प्रायश्चित्तं नविद्यते ।
दैवात्कृते महापापे प्रायश्चित्तविवर्जिते ॥ 13

प्रायश्चित्तंतु तस्योक्तं विष्णोर्नामकथामृतम् ।
विष्णोर्नामसहस्रस्य पठनाद्यत्फलंद्विज ॥ 14

तत्फलं समवाप्नोति विष्णोरानन्द दायिनः ।
क्षेत्रस्यास्यप्रभावस्य श्रवणाद्भुवि वै नृणाम् ॥ 15

तस्मादहं प्रवक्ष्यामि श्रुणुष्वावहितोद्विज ।
पुत्रपौत्रप्रदं नृणां कलौ कलुषनाशनम् ॥ 16

क्रतुसंपूर्णफलदं मनोऽभीष्टप्रदायकम् ।
सन्तिक्षेत्राण्यनेकानिफलदानि शुभानि तु ॥ 17

दिव्यसैद्धादिभेदेन वर्त्तेहरिरव्ययः ।
अष्टोत्तरशतंस्थानं तेषु सारं कलौयुगे ॥ 18

चतुर्विंशत्स्थलं तेषु वरं माधववल्लभम् ।
द्विषट्स्थानंवरं तेषु भूमौमोक्षप्रदं नृणाम् ॥ 19

श्रीरङ्गं दर्भकान्तारं श्रीमुष्णं शेषभूधरं ।
नैमिषं च कुरुक्षेत्रं वटारण्यमनुत्तमम् ॥ 20

स्यान्दूरं च तोताद्रिं श्रीमत्काञ्चीपुरंशुभम् ।
गण्डिकाद्रिं परं स्थानं नरनारायणंत्विति ॥ 21

एतेषां क्षेत्रवर्याणां वरं वटघनं द्विज ।
स्मराणात्सर्वदोषघ्नं निवासादिष्ट सिध्दिदम् ॥ 22

नमनान्मोक्षदं नृणां दर्शनाज्ज्ञानदायकं ।
पूर्वांभोधेः प्रतीच्यांतु योजनान्तेसुपावनम् ॥ 23

प्रागुदक्प्रवणे विप्रसुगन्धेशस्यवैप्रभोः ।
क्रोशद्वयेतथाविष्णोः त्रिविक्रमपुरस्यहि ॥ 24

भरद्वाजाश्रमस्यास्य दक्षिणेयोजनान्तिके ।
वरदस्य तुपूर्वे तु ह्यर्धयोजनमात्रके ॥ 25

क्षेत्रमस्ति महापुण्यं सह्यजायास्तटे शुभम् ।
नानावृक्षसमायुक्तं नानाविहगनादितम् ॥ 26

नानाकुसुमशोभाढ्यं भ्रमद्भ्रमरमण्डितम् ।
मयूरनिनदोपेतं मत्तमातङ्गशोभितम् ॥ 27

नानासुरभिशोभाढ्यं नानाकासारसंयुतम् ।
अन्योन्यवैररहितमृगसंदोहशोभितम् ॥ 28

यस्य संदर्शनादेव ब्रह्महत्यौघकोटयः ।
नश्यन्ति क्षणमात्रेण सिंहत्रस्त मृगाइव ॥ 29

क्षणंक्षणार्धमेवाथ तत्रवासात्सुरेश्वरः ।
भवत्येवनसंदेहः सत्यं मद्वचनंद्विज ॥ 30

कृतेतुयोजनामात्रं परितोवटकाननम् ।
त्रेतायां तु तदर्धंहिद्वापरे पादयोजनम् ॥ 31

क्रोशार्धंतत्कलौप्रोक्तंस्नानदानजपादिषु ।
कृतेपुन्नागविपिनं त्रेतायांतुळसीवनम् ॥ 32

द्वापरेबकुळारण्यं वटारण्यं कलौ युगे ।
एकएवमहावृक्षो चतूरूपेणदृश्यते ॥ 33

यमोपि दूताननिशं ब्रूतेपरमदारुणान् ।
वटारण्यस्यपरितो मार्गाद्वा एकयोजनम् ॥ 34

मायात यात मायात प्रमादादितिवैपुन : ।
किंवक्तव्यंमुनिश्रेष्ठ तत्क्षेत्रस्य चवैभवम् ॥ 35

साक्षात्कवेरजापूर्वंद्रष्टुं रङ्गेश्वरं हरिम् ।
उदीचीदिङ्मुखीभूत्वा शङ्खतीर्थेनसंयुता ॥ 36

सप्ताहमनिशं देवं संप्राप्यतप आचरत् ।
अथशौनक रङ्गेश : पौर्णम्यां सिंहगे रवौ ॥ 37

तस्या : प्रत्यक्षतामेत्य कोटिकंदर्पदीधिति ।
अगस्त्य शापान्माभैषी गच्छभद्रे महोदधिम् ॥ 38

इत्युक्तारङ्गराजेन प्राङ्मुखीप्रययौ पतिम् ।
तदावसिष्ठ स्तपतां वरिष्ठ : सपुत्रशोकेननिमज्यकाश्याम् ॥ 39

प्रातर्हरिं रङ्गविमानगंतं मध्याह्नकाले तु समर्चयेऽनिशम् ।
श्रिरामसेतौ तु प्रदोषकाले स्नास्येतिसंकल्प्य तथाकरोद्दिज॥ 40

स्नात्वैकदाजह्नुसुताजलेच द्रष्टुंहरिं दण्डकं चापवेगात् ।
षड्योजनं रङ्गपतेश्चपूर्वे त्रिविक्रमात्क्रोशयुगेप्रतीच्याम् ॥ 41

मध्याह्नकाले तमसावृतंवियद्बभूवसर्वत्रववर्षुरभ्रा : ।
आपचासौ वटारण्यं क्षेत्रंलवकुशाभिधं ॥ 42

यत्रपूर्वं लवकुशौ कुर्वेतां राष्ट्रमुत्तमम् । [भूत् ॥
दृष्ट्वा वसिष्ठः स्वचिकीर्षहानात् त्यक्ष्यामि प्राणानिति निश्चितो- 43

तदैव भोगेन्द्रशयी महात्मा श्रीजम्बुनाथ प्रमुखैः समस्तैः ।
स एव रङ्गाधिपतिः सहैव प्रत्यक्षतामाप च तस्यमाध्यां ॥ 44

इति श्रीमद्भविष्योतरपुराणे क्षेत्रसारखण्डे उपरिभागे
वट रंग माहात्म्ये अनुक्रमणिकं नाम शताधिक विंशोध्याय ः ॥

श्री ः

## द्वितीयोऽध्यायः

श्रीसूतः ः—

पाणिं गृहीत्वा वेगेन स्वकराभ्यां रमापति ः ।
साहसं कुरु मा विप्र किमेतदिति चाब्रवीत् ॥ 1

ब्रह्मात्मजस्तु रङ्गेश करसंस्पर्शनाद्विज ।
मुक्तशोको हृषीकेश पदयोः स्वर्णदण्डवत् ॥ 2

प्रणम्य हृष्टः तुष्टाव कृताञ्जलिपुटस्तदा ।

वसिष्ठः ः—

नमो नमोऽगण्यगुणैकसिन्धो समस्त कल्याणनिदानमूर्ते ॥ 3

नमोनमः केशव इन्दिरेश भवाटवी हव्यवहाय तुभ्यम् ।
नमोनमः कारण वामनाय नारायणायाऽमितविक्रमाय ॥ 4

श्रीशार्ङ्ग चक्रासि गदाधराय नमोस्तु तस्मै पुरुषोत्तमाय ।
मायाविने मायिमदापहारिणे कर्त्रे विकर्त्रे गुणपूर्णसिन्धवे ॥ 5

नमामि विश्वंभर कालमूर्ते श्रीरंगनाथाय नमोनमस्ते ।
स्तुत्वेत्थं संनिधौ शौरेः प्रणम्य च पुनः पुनः ॥ 6

प्रोवाच विनयेनैव कृताञ्जलिपुटस्तदा ।

वसिष्ठः :—

पुत्रशोकादहं देव जान्हव्यां प्रातरन्वहम् ॥ 7

स्नात्वा तस्माद्रङ्गनाथं मध्यान्हे संप्रणम्य च ।
चन्द्रतीर्थे तु संस्नात्वा सायान्हे सेतुमज्जनम् ॥ 8

करिष्यामीति संकल्प्य कृतोस्मि बहुवत्सरम् ।
अद्य तस्य विघातोभू त्तस्मात्प्राणान् त्यजाम्यहं ॥ 9

विरिञ्चिपुत्रस्य वचो निशम्य मन्दस्मितः प्राह जनार्दनो ऽव्ययः ।
तव प्रतिज्ञा नवृथा बभूव तस्मान्मया दत्तमिहैव दर्शनम् ॥ 10

द्रक्षस्व पुन्नागतरुं पुरस्थं तच्चन्द्रतीर्थं मम चाग्निकोणगम् ।
क्षेत्रं मदीयं बहुपुण्यदं मुने इदं विजानीहि ततोधिकं द्विज ॥ 11

इति श्रुत्वा हरे र्वाक्यं आनन्दाश्रुपरिप्लुतः ।
प्रोवाच विनयेनैव वसिष्टो ऋषिसत्तमः ॥ 12

वसिष्ठः :—

वस त्वमत्र कल्पान्तं वटनाम भवेत्तव ।
देव्या तीर्थ वरस्यापि क्षेत्रस्यास्य रमापते ॥ 13

पुन्नागतरु रेवस्या द्वटश्चाक्षय संज्ञकः ।
गङ्गास्नाने यतोनित्यं नमन्वटतरुं त्वहम् ॥ 14

कृतं स्नानं च सकलं अद्य त्वत्संदर्शनादभूत् ।
अतो वटस्स्याद्देवेश पुन्नाग स्सकलेष्टदः ॥ 15

इति तस्यवचः श्रुत्वा तथा स्यादिति चाब्रवीत् ।
पुनः प्रणम्य देवेश मनुज्ञाप्य विधेः सुतः ॥ 16

सौधालयविधौ चैव ह्याविर्भावोत्सवे तथा ।
विश्वकर्माण माहूय तपसा पौरुषेण च ॥ 17

कुरुष्वालय निर्माण मचिरा द्दृढ मव्ययम् ।
विश्वकर्मापि विश्वसृक् पुत्रस्य वचनान्मुने ॥ 18

ओमित्युक्त्वा ततश्चक्रे रङ्गेशं संप्रणम्य च ।
सप्तप्राकार संयुक्तं गोपुरै रुपशोभितम् ॥ 19

वप्रतोरण शोभाढ्यं चित्र पुत्तलिकान्वितम् ।
परिवारालयोपेतं खगेन्द्रालय संयुतम् ॥ 20

ध्वंजपीठ महापीठ हर्म्य सोपान संयुतम् ।
वाहनान्दोळिकोपेतं सर्वरत्नमयं धृढम् ॥ 21

रथं ध्वज पताकाद्यै रन्वितं हरितुष्टये ।
शाला सौधोप शोभाढ्यं पात्राणि विविधानिच ॥ 22

तीर्थ सोपान संयुक्तं वृक्ष वेदी समन्वितम् ।
रथवीथि समायुक्तं द्विजालय समन्वितम् ॥ 23

एवमालय निर्माणं कृत्वा तु सुरतक्षकः ।
सर्वं समर्प्य मुनये वसिष्ठं संप्रणम्य च ॥ 24

रंगेश्वरं प्रणम्याज्ञां गृहीत्वा प्रययौ दिवम् ।
ततो वसिष्ठः संतुष्टो दृष्ट्वालयमनुत्तमम् ॥ 25

स्नात्वा चोत्तर वाहिन्यां वटपादप मूलके ।
धृतोर्ध्वपुण्ड्रो भक्त्यातु ह्यष्टाक्षर मनुं जपन् ॥ 26

उत्सवार्थमनुज्ञाप्य रंगनाथं प्रणम्य च ।
वृषभस्थे दिवानाथे नक्षत्रे चेन्द्रदैवते ॥ 27

ध्वजमारोप्य देवस्य वाहनांदोलिकादिभिः ।
वेदघोषै श्शास्त्रघोषै र्वाद्यघोषै र्विशेषतः ॥ 28

नटनर्तन शब्दैश्च ह्यन्नदानादिभिर्द्विज ।
नानाकुसुम जालैश्च नैवेद्यैः षड्रसैस्तथा ॥ 29

कृत्वा महोत्सवं भक्त्या घनदीप सहस्रकैः ।
रथोत्सवं तथाकृत्वा नवमेहनि वै द्विज ॥ 30

कावेर्यां शंखतीर्थे तु देवदेवस्य चक्रिणः ।
उत्सवाऽवभृथं चक्रे नक्षत्रे विष्णुदैवते ॥ 31

महाभिषेकं विधिना चकार विभवैस्सह ।
दानानि दत्वा विप्रेभ्यो गो भू वस्त्रादिकां स्तदा ॥ 32

विप्रान्संभोजयामास षड्रसैश्च मनोरमैः ।
फल पानक सच्छत्र व्यजनानि ददौ तदा ॥ 33

नित्यपूजां तथा कृत्वा मासपूजां तथाऽकरोत् ।
ग्रामाणां दशकं कृत्वा नित्यपूजा विधौ हरेः ॥ 34

मघोत्सवार्थं देवस्य द्रव्यं दत्वा सुभक्तितः ।
ततो रंगं नमस्कृत्य ह्यनुज्ञाप्य विशेषतः ॥ 35

ऋषिमण्डलगो भूत्वा ह्यद्यापि परिदृश्यते ।
तस्मात्तत्क्षेत्र सदृशं नास्ति नास्ति जगत्रये ॥ 36

तस्माच्च तत्क्षेत्रवरं सुमङ्गळं श्रीरंगराजस्य च सिद्धिदायकम् ।
काम्यप्रदं भक्तिविवर्द्धनं च सद्ज्ञान वृध्दिप्रद मव्ययं द्विज ॥ 37

इतिश्रीमद्भविष्योत्तर पुराणे क्षेत्रसारखण्डे
उपरिभागे वटरङ्ग माहात्म्ये
द्वितीयोऽध्यायः ॥

श्रीः

## तृतीयो ऽध्यायः

श्रीशौनकः :—

पुराणज्ञ महाभाग त्रिकालज्ञ महामते ।
पूर्वं कवेरजा केन कर्मणा ऽगस्त्य शापतः ॥ 1

अत्रागच्छत केनैव बोधिता द्विज सत्तम ।
कात्स्न्येंन वद हे विद्वन् दयया मयि तत्कथाम् ॥ 2

शौनकेनैव मुक्तस्तु सूतः प्रोवाच पूर्णधीः ।
श्री सूतः :—
तद्वक्ष्यामि समासेन कावेर्याश्चरितं मुने ॥ 3

मलये सह्यजा पूर्वं चकार तप उत्तमम् ।
गङ्गाधिक्यं वरंप्राप्तुं दुस्तरं हरितुष्टये ॥ 4

तदैवकुंभजः साक्षाद्बोधितः परमेष्ठिना ।
मलयं प्राप्यतां दृष्ट्वा उद्वाहयितुमादरात् ॥ 5

बिंबोष्ठीं पद्मवदनां सुनासां सुदतीं शुभाम् ।
कालालिकुलसंकाश कमनीय शिरोरुहाम् ॥ 6

झषकेतु करस्थैव सुन्दर भ्रूविराजिताम् ।
कम्बुग्रीवां पक्वबिल्व फलोपम पयोधराम् ॥ 7

सुभुजां सुनखां श्यामां वलित्रय विराजिताम् ।
काकोदर सुभोगाभ रोमावलि समन्विताम् ॥ 8

नागारिमध्यां नागेन्द्र नासिकोरुद्वयान्विताम् ।
पक्ष किंजल्क संकाश पदपल्लव शोभिताम् ॥ 9

ध्यानारूढां सुरूपां तां दृष्ट्वा विष्णुपदेक्षिणीम् ।
स्मयमानमुखो भूत्वा विद्धः पञ्चेषुणा मुनिः ॥ 10

उवाच मामुदीक्षस्व चक्षुषा त्वं वरानने ।
ब्रह्मणः शासनाद्भद्रे यातोस्मि तवसंनिधौ ॥ 11

कुम्भजं मां विजानीहि भार्या भव ममाशु च ।
इत्युक्त्वा तत्करं धृत्वा प्राचलत्कुंभसंभवः ॥ 12

तदा सा निश्चलाभूत्वा नोवाच ध्यानतत्परा ।
तां दृष्ट्वा कोपताम्राक्षो दन्तान्कटकटाय च ॥ 13

पतिनासह सल्लापो मास्तुमास्तु कदापि ते ।
शप्त्वेत्थं तु तदावेगा त्कुंभजो गमने मतिम् ॥ 14

चकार च यदा सह्यतनयापि तदा जवात् ।
उन्मील्य नयने स्वे च पुरो दृष्ट्वा प्रकोपितम् ॥ 15

साक्षादुग्रस्वरूपं तं मैत्रावरुणि मादरात् ।
प्रणम्याश्रुपरीताङ्गी प्रोवाच सभयाद्द्विज ॥ 16

स्वामिन्नगस्त्य योगीन्द्र क्षमस्व दयया मयि ।
गङ्गाधिक्यमहं प्राप्तुं करोमि तप उत्तमम् ॥ 17

तन्निष्ठात्वां नजानेऽहं तस्माद्रक्षस्व माचिरम् ।
पतिव्रतानां सर्वासां पतिरेव जनार्दनः ॥ 18

तत्सल्लापादैहिकं च परत्र च परांगतिं ।
तस्माच्छापस्य मोक्षंतु ददस्व करुणानिधे ॥ 19

अहमेकांशतो विप्र भवे भार्या तवाशु वै ।
इति प्रसादितः साक्षान्मुनिः सद्वंशसंभवः ॥ 20

पुनः प्रोवाच तां विप्र श्रुणुष्वेति कवेरजाम् ।
मच्छापस्य प्रमोक्षार्थं ह्युपायं ते वदाम्यहम् ॥ 21

प्रतीच्यां पूर्ववाराशे र्गव्यूतिद्वयमात्रके ।
सुगन्धारण्य नाथस्य ऐशान्ये किंचिदुत्तरे ॥ 22

नारदेशस्य पूर्वेतु क्रोशयुग्मे त्रिविक्रमात् ।
तथा दक्षिणदेशेतु भरद्वाजाश्रमस्य हि ॥ 23

वर्तते रङ्गराट् तत्र शङ्खतीर्थस्य रोधसि ।
विरिञ्चि तनयस्यास्य मनोऽभीष्ट प्रदोहरिः ॥ 24

पुन्नागभूरुहः साक्षान्यग्रोधश्च प्रदृश्यते ।
तच्छायायां महीन्द्रस्य भोगे स्वपिति वै हरिः ॥ 25

तत्र गच्छस्व वेगेन मालिका रूपतोहरेः ।
तत्रस्थ शङ्खतीर्थेन संयुता सप्तरात्रकम् ॥ 26

पूजयस्व विरिञ्च्याद्यै रर्चितं रङ्गनायकम् ।
त्वंतु तत्क्षेत्र वासाच्च शङ्खतीर्थस्य संगमात् ॥ 27

सेवनाद्रङ्गनाथस्य पतिसल्लाप मेष्यसि ।
इति श्रुत्वा मुनेर्वाक्यं अगस्त्यं संप्रणम्य च ॥ 28

कृताञ्जलिपुटाभूत्वा उवाच कलशोद्भवम् ।
अह मेकान्ततो ब्रह्मन् धर्मपत्नी भवेत्तव ॥ 29

किंचित्कालं तपःकृत्वा श्रीशादापाद्य सद्वरम् ।
गङ्गाधिक्यमहं यास्ये भवता ब्रह्मभूधरम् ॥ 30

तस्मा न्निर्गत्य वेगेन वसिष्ठस्य वरप्रदम् ।
रङ्गनाथं प्रार्थयित्वा ततो गच्छामि सागरम् ॥ 31

इति प्रसाद्य कावेरी पुनस्तमुं मनोदधे ।
अगस्त्योपि महातेजाः स्थित्वा तत्रैव सह्यजाम् ।। 32

क्वचित्कालात्समुद्वाह्य लोपामुद्रां तदंशजाम् ।
अत्रान्तरे सह्यसुता गङ्गाधिक्यं च केशवात् ।। 33

संगृह्य हृष्टा कलशोद्भवेन साकं ययौ ब्रह्ममयं च भूधरम् ।।
निर्गत्य तस्मादति वेंगतो ययौ न्यग्रोध कान्तारग रंगनाथम् ।। 34

इति श्रीमद्भविष्योतरपुराणे क्षेत्रसारखण्डे
उपरिभागे वटरङ्ग माहात्म्ये
तृतीयोऽध्यायः ।।

---

श्रीः

## चतुर्थोऽध्यायः

सूतः :—

दृष्ट्वा तद्वनसौन्दर्यं नानापुष्प फलान्वितम् ।
नानाभूरुह शोभाढ्यं भ्रमद्भ्रमर नादितम् ।। 1

तन्मध्ये देवदेवेंड्यं दक्षिणाभि मुखस्थितम् ।
शयानं फणितल्पेतु दृष्ट्वा दूरात्कवेरजा ।। 2

पञ्चबाणनिपाते तु रङ्गनाथस्य दक्षिणे ।
स्थित्वा संचिंत्य कावेरी मोहिता विष्णुमायया ।। 3

कुत्रास्ति शङ्खतीर्थं तु ह्यगस्त्येनोदितं महत् ।
कथंद्रक्ष्ये कथं शापान्मोक्ष्येहं पतिनाद्विज ।। 4

संगतास्मि कदेत्येवं चिन्तिता सह्यजा तदा ।
तदैव दैवयोगेन वाणीचाकाश संभवा ।। 5

ह्याविरासीद्रङ्गनाथप्रतीच्यां नातिदूरके।
तीर्थमस्ति महापुण्यं सह्यजे शङ्खसंज्ञिकम् ॥ 6

तत्र गच्छेति चोक्त्वैव खवाणी विरराम सा ।
श्रुत्वा विष्णुपदावाक्यं कावेरी तुष्टमानसा ॥ 7

उदीची दिङ्मुखेनैव शङ्खतीर्थेन संयुता ।
तुलासंस्थे दिनकरे शुक्लपक्षे विशेषतः ॥ 8

उडुराजाधिपं रङ्गमादौ नत्वा कवेरजा ।
स्नात्वा तच्चन्द्रतीर्थे तु मौनव्रत परासती ॥ 9

अष्टोत्तरशतं नित्यं परिक्रम्य प्रणम्य च ।
देवदेव्योर्घृतेनैव दीपमुज्ज्वाल्य शौनक ॥ 10

पुष्पैर्धूपैश्च नैवेद्यैः पायसैश्चैव मुख्यतः ।
महाभिषेक पूर्वैश्च रङ्गनाथं च नायकीम् ॥ 11

सप्ताहमेवं कृतवती पौर्णम्यामुदये शुभे ।
तस्याः प्रत्यक्षतामाप कोटिकंदर्पदीधितिः ॥ 12

श्रीजंबुनाथ मरुदर्कसुरेश्वराद्यैः समन्वितास्सिद्धमणैरभिष्टुतः ।
भेरीमृदङ्ग पणवानक वेणुवीणा गीतस्वनै र्वेदरवैश्च पार्षदैः ॥ 13

सा दृष्ट्वा देवदेवेशं शङ्खचक्र गदाधरम् ।
निरञ्जनं निर्विकारं गरुडांसे समाश्रितम् ॥ 14

भक्त्या प्रणम्य रंगेशं कावेरी द्विजसत्तम ।
पुलकाङ्कित सर्वाङ्गी कृताञ्जलिपुटाऽब्रवीत् ॥ 15

कावेर्युवाच :—
नमो नमस्ते रंगेश श्रीवत्सकृतलक्षण ।
कृपांकुरु मयि स्वामि न्नित्युक्तो रंगराड् प्रभुः ॥ 16

प्रत्युवाच विधेःपुत्रीं वरं वरय सुव्रते ।
तुष्टोहं सेवया देवि शङ्खतीर्थस्य संगमात् ॥ 17

इत्युक्ता सा वरं वव्रे कावेरी कलिनाशिनी ।
कावेरी :—
रत्नाकरो मयि प्रीतिं करोतु कमलापते ॥ 18

अत्र चोत्तरवाहिन्यां पञ्चबाणान्तिके मयि ।
यः स्नाति मनुजो देव तस्य लक्ष्मीः प्रसीदतु ॥ 19

शङ्खतीर्थे मयि स्नानात्सर्वाभीष्टा नवाप्नुयात् ।
अस्यां हि पौर्णिमायां च यःस्नाति मनुजो मयि ॥ 20

कोटि गङ्गास्नानफलं प्राप्नोतु तव शासनात् ।
अस्मिंस्तौलिगते भानौ शुक्लपक्षे तु भार्गवे ॥ 21

स्नात्वा तु चन्द्रतीर्थे च या नारी पुत्रगृद्धिनी ।
पिष्टदीपं समुज्वाल्य देव्याः कुङ्कुमतोऽर्चनम् ॥ 22

अष्टोत्तरशतेनाथयाव त्तावत्प्रदक्षिणम् ।
या करोति च मौनेन पुत्रं सा मन्मथोपमम् ॥ 23

मृतवंध्यापि देवेश प्राप्नोतु तव शासनात् ।
इत्युक्तो रंगराड्वः तथास्यादिति चोक्तवान् ॥ 24

एवं लब्धवरा देवी देवदेव्यौ प्रणम्य च ।
तमनुज्याप्य वेगेन प्रययौ पतिमम्बुधिम् ॥ 25

तदाप्रभृति तत्क्षेत्रे कावेर्योत्तरवाहिनी ।
शङ्खतीर्थे प्रवहति तत्र स्नानाद्द्विजोत्तम ॥ 26

नीलकुष्टादिरोगेभ्यो मुक्तिमेति न संशयः
शौनकः :—
कस्याभून्नीलकुष्ठस्तु केन दोषेण सुव्रत ॥ 27

स कुलत्यो ऽत्रस्नानेन केनोक्तोभू न्निरामयः ।
ब्रह्मात्मजस्तु तच्छ्रुत्वा पुनःप्रोवाच शौनकम् ॥ 28

पुरा सौराष्ट्रदेशे तु चन्द्रकीर्ति रितिश्रुतः ।
शौर्यौदार्य गुणोपेतो धनुर्वेद विचक्षणः ॥ 29

यत्रगच्छति राजासौ स्वपदं स्थापयत्यहो ।
खनित्वा तत्र वित्तानां कुंभान्द्रक्षति नान्यथा ॥ 30

पुराल्पधान्यफलित स्थानंदृष्ट्वा सकृन्नृपः ।
पूर्वस्मात्कोटिगुणितं फलं फलति नान्यथा ॥ 31

दिगन्त स्थापितयशाः चतुरङ्ग बलान्वितः ।
यष्टासौ सर्वयज्ञानां देवद्विजविचक्षणः ॥ 32

पूजयत्यनिशं देवं रमानाथं खगध्वजम् ।
तस्यैवं वर्तमानस्य फलितस्य नृपस्य वै ॥ 33

पूर्वजन्म कृतात्पापा त्पुत्रः कुष्टीबभूव हि ।
नासीद्वंशकर श्चान्यो वर्तते तं विनाद्विज ॥ 34

कुष्टरोगा त्सदूष्यश्च इतरैश्च महागुणैः ।
संपूर्णः सर्वविद्यावान्सर्वलक्षण संयुतः ॥ 35

दृष्ट्वा सुतं स्वस्य नृपोत्तमोसौ राज्याभिषेकं कथमस्यकुर्वे ।
इत्थं विचिन्त्य व्यसनार्णवेतु सभार्यकोन्मत्तवदेवचासीत् ॥ 36

इति श्रीमद्भविष्योत्तरपुराणे क्षेत्रसारखण्डे
उपरिभागे वटरङ्ग माहात्म्ये
चतुर्थोऽध्यायः

श्रीः

## पंचमोऽध्यायः

पुत्रशोकेन संतप्तं राजानं मन्त्रिणोऽब्रुवन् ।

मन्त्रिणः :—

केनसंतप्यसे राज न्वदास्माकं जवात्तदा ॥ 1

तस्योपायं वदिष्यामः इत्युक्तोनृपसत्तमः ।
मत्क्लेशोपशमे शक्तो नास्ति नास्ति जगत्त्रये ॥ 2

मत्सुतो नीलकुष्टेन प्रदहत्यनिशं हि वै ।
किंकरोमि क्वगच्छामि कथंराज्ये ऽभिषेचयें ॥ 3

नराज्यार्होह्ययं पुत्रो नदृष्टिविषयो ह्ययम् ।
कुष्टिनं यस्तु पश्येत सचैलं स्नानमाचरेत् ॥ 4

सोपि भानुं समुद्वीक्ष्य घृते बिंबं च दर्शयेत् ।
प्रातः सकृद्वा त्वग्दोषयुक्तं पश्यति वै हटात् ॥ 5

कुष्ठिनं यद्दिनेलोकाः कालयंति च तद्दिने ।
नान्यं संक्वलयेत्क्वापि इति केशवशासनं ॥ 6

जन्मप्रभृति यत्पुण्यमार्जितं तद्विनश्यति ।
तस्मात्पुत्रो न मे चान्यः फलितस्य च विद्यते ॥ 7

एवं चिन्तयतस्तस्य मन्त्रिणां मध्यगस्य च ।
अवशात्काश्यपो वेंगात्तद्गृहं प्रतियेयिवान् ॥ 8

तमागतं नृपश्रेष्टः प्रणम्य मुनिपादयोः ।
अर्घ्यपाद्यादिकं दत्वा कृताञ्जलिपुटो ऽब्रवीत् ॥ 9

किमागमनकृत्यं तु वदस्व ममसुव्रत ।
इत्युक्तश्च नृपेणैव काश्यपो वाक्यमब्रवीत् ॥ 10

बहुस्वर्णस्ययागस्य द्रव्यं याचयितुं नृप ।
आगतं मां विजानीहि देहि वित्तं नृपोत्तम ॥ 11

इत्युक्तः स तदा तूष्णीमासी न्नृपवरोद्विज ।
मुनिर्ज्ञात्वा तु तत्स्वांत ज्ञानदृष्ट्या ऽब्रवीन्नृपं ॥ 12

मुनिः —
भो भो राजेन्द्र पुत्रस्य नीलकुष्टनिवारणे ।
उपायं ते प्रवक्ष्यामि रहस्यमतिपावनम् ॥ 13

पूर्वाम्भोधेः प्रतीच्यां तु सह्यजाया स्तटेशुभे ।
नांतिदूरे चंपकेशा दाग्नेय्यां योजनार्धके ॥ 14

ब्रह्मपुर्याः प्रतीच्यां वै क्रोशयुग्मे सुपावनम् ।
त्रिविक्रम प्रतीच्यां तु क्षेत्रमस्ति महत्तरम् ॥ 15

तत्रास्ति जगतीनाथः तस्य पश्चिमतो नृप ।
तीर्थमस्ति महापुण्यं कावेर्यां शङ्खसंज्ञकम् ॥ 16

तत्र गंत्वा तु वैशाखे शोणायां विष्णुतत्परः ।
उत्सवावभृते दिव्ये साक्षाद्रङ्गेश संनिधौ ॥ 17

स्नानं कारय पुत्रस्य न्यग्रोधतरुमूलके ।
दापयस्व च कार्पासं नीलकुष्टः प्रशाम्यति ॥ 18

पुत्रस्य न च संदेहः सत्यं मद्वचनं नृप ।
पुत्रोयं सप्तजन्मान्ते दरिद्रोहि द्विजाधमः ॥ 19

कृषीवलो महापापी वाराणस्यां वसन्नृप ।
अटन्सर्वत्रलोहार्थं कुत्रापि फलमात्रकम् ॥ 20

कथंकुर्वे खनित्रेय हीनं कृषि महं द्विज ।
इतिचिन्तापरीताङ्गो रात्रौवीथ्यां समाययौ ॥ 21

देवस्य माधवस्यैव दृष्ट्वा स्यन्दनमुत्तमम् ।
तद्वंलोहमयं दण्डं गृहीत्वा गृहमागतः ॥ 22

कृत्वाखनित्रं तद्दण्डा त्कृषिंकृत्वा द्विजाधमः ।
कुटुंबं रक्षयित्वासौ स्थितवां स्त्वत्सुतः पुरा ॥ 23

तेनदोषेण महता नीलकुष्टी बभूव हि ।
तस्माद्गच्छस्व शीघ्रेण त्वग्दोष परिहारकम् ॥ 24

महान्कालो ममैवासी द्यज्ञकर्तु र्नृपोत्तम ।
इत्युक्तः सनृपो द्रव्यजालं दत्वा प्रणम्य च ॥ 25

काश्यपो द्रव्यनिचयं गृहीत्वा प्रययौ स्थलम् ।
चन्द्रकीर्ति स्ततो वेगात्सपुत्रः सहसैनिकः ॥ 26

काश्यपोक्त प्रकारेण वटरंगं समाययौ ।
दृष्ट्वा तद्रंगराजानं शयानमुरगोपरि ॥ 27

शंखचक्र गदापद्म शार्ङ्गाद्यायुध संयुतम् ।
पूजितं सर्व देवैश्च पूर्वैरपि विधातृभिः ॥ 28

प्रणम्य भार्यापुत्राभ्या मुध्दरस्वेति चार्थयन् ।
ततो गत्वा शंखतीर्थं नत्वा तत्रस्थ पिप्पलम् ॥ 29

न्यग्रोधं च तरुश्रेष्टं प्रणम्य हरिभक्तितः ।
विष्वक्सेनं पालकं च वसिष्टं तस्य वै ऋषिम् ॥ 30

देवतां रंगनाथं च सरंस्तत्र निमज्य च ।
तथा निशेशतीर्थे तु स्नात्वा भक्तिसमन्वितः ॥ 31

ततो वटं समासाद्य परिक्रम्य प्रणम्य च ।
कार्पासं कंबलं लोहं गामप्युभयतो मुखीम् ॥ 32

दापयामास पुत्रेण दानानि निजशक्तितः ।
एवं दशदिनान्तं हि सेवां कृत्वा सपुत्रकः ॥ 33
देवस्याभिषेकमुखै नैवेद्यांतैः समाचरत् ।
तथा मध्यान्ह कालेतु चन्द्रतीर्थे निमज्य च ॥ 34
तस्मिन्विप्रसहस्रणा मन्नदानं समाचरत् ।
तदैव विप्रोत्तम भोजनेन श्रीरंगनाथस्य च सेवनाच्च ॥ 35
स्नानेन नीरोद्भवतीर्थवर्ये त्वग्दोष दूरोह्यभव त्सपुत्रः ॥

इति श्रीमद्भविष्योत्तरपुराणे क्षेत्रसारखण्डे
उपरिभागे वटरङ्ग माहात्म्ये
पंचमोऽध्यायः

---

श्रीः
## षष्ठोऽध्यायः

श्रीसूतः —
चन्द्रध्वजो महाराजा दृष्ट्वा तद्रंगवैभवम् ।
चन्द्रतीर्थस्य माहात्म्यं ह्यानन्दाश्रु परिप्लुतः ॥ 1
ननर्तोन्मित्तवत्पुत्रं सस्नेहं परिषस्वजे ।
पत्न्यापुत्रेण संयुक्तो रंगनाथं प्रणम्य च ॥ 2
आलयं जीर्णमुध्दर्तु मनुज्ञाप्य श्रियःपतिम् ।
प्राकार गोपुरादींश्च विमान शिखराणि च ॥ 3
जीर्ण मुद्धरणं कृत्वा तथा तीर्थवरस्य च ।
मणिसोपान मुख्यैश्च तथा चन्द्रकृतस्य च ॥ 4

कारयामास भूपालः पुनरानम्य तं हरिम् ।
उत्सवं कारयामास वसिष्ठेन कृतं महत् ॥ 5

वेदघोषैः शास्त्रघोषै र्नटनर्तकपूर्वकैः ।
मृदंग भेरीपटहै र्वाहनान्दोळिकादिभिः ॥ 6

विप्रभोजन मुख्यैश्च गोभूदानादिकैरपि ।
कारयामास विभवै र्नवाह मविशेषतः ॥ 7

रथोत्सवं तथा चक्रे पानकैश्च फलैस्तथा ।
नवमेहनि देवस्य शंखतीर्थे सुपावने ॥ 8

तीर्थदानोत्सवं कृत्वा स्वयं पुत्रसमन्वितः ।
स्नात्वा तु ऋषभे मासे नक्षत्रे विष्णुदैवते ॥ 9

शिंशुमारं प्रतिष्ठाप्य रुक्मपात्र स्थमापतिम् ।
दानं दत्वा तु गुरवे ब्राह्मणान् भोजयनृपः ॥ 10

उत्सवार्थं स्वयंभूपः ग्रामाणां दशकं ददौ ।
तथैव रङ्गराजस्य नित्यपूजा महाविधौ ॥ 11

मुहुर्मुहुः पुत्रमवेक्ष्य राजा मुदान्विदानन्दमयं स रंगं ।
आनम्य पुत्रादिभिरन्वितो ययौ स्वदेशमामन्त्रय च विप्रवर्यम् ॥ 12

शौनकः —

स्वामिं त्वत्तः श्रुतंसर्वं मया श्रीरङ्गवैभवम् ।
शंखतीर्थ वरस्यास्य वैभवं कामदंनृणाम् ॥ 13

तच्छङ्खतीर्थं तत्क्षेत्रे कथमासी द्वदस्वमे ।
इत्युक्तः शौनकेनाथ सूतः प्रोवाच पूर्णधीः ॥ 14

पुराभू न्नमुचेः पुत्रः विक्रमो नाम वै बली ।
गोकर्णे शंकरक्षेत्रे तपस्तप्त्वा सुदुस्तरम् ॥ 15

इन्दुमौळि मुमाकान्त मर्चय न्शरदांशतम् ।
सुरान्सर्वा न्भक्षयितुं बलमाप्तुं हि शौनक ॥ 16

तथापि तत्र कैलासनाथो नेक्षणगोह्यभूत् ।
मातृभूतं तथाभ्येत्य तत्राप्यष्टसहस्रकं ॥ 17

तपश्चकार तत्रापि नदृष्टिविषयो ह्यभूत् ।
वृध्दाचलं तथा प्राप्य प्रतीच्यां शंकरस्य तु ॥ 18

कृत्वा ह्यगाधगर्तं तु तत्र स्थित्वा महाबलः ।
अयुतं शरदां विप्र चकार तप उत्तमम् ॥ 19

तदैव गीर्वाणगणाः शशंसुः पितामहायाशु दितेः सुतस्य ।
स्वान्तं कथंचित्तमवध्यमाशु त्वया स हन्तव्य इतीरितोविधिः ॥ 20

इति श्रीमद्भविष्योत्तरपुराणे क्षेत्रसारखण्डे
उपरिभागे वटरङ्ग माहात्म्ये
षष्ठोऽध्यायः

---

श्रीः

सप्तमोऽध्यायः

श्रीसूतः —

श्रुत्वैवं विबुधेशानां शुभां वाणीं पितामहः ।
किं कर्तव्यं मया देवाः अवध्योयं महाबलः ॥ 1

तस्मा द्गच्छाम देवेशं शरण्यं सर्वरक्षकम् ।
तं विना नहिलोकेषु तं हन्तुमिति चाब्रुवन् ॥ 2

ततो देवैः समस्तैश्च सहितो द्वियुगाननः ।
तीरं क्षीरोदधे र्मन्दं ययौ च खगवाहनम् ॥ 3

तुष्टवु र्विविधै स्तोत्रैः कृताञ्जलिपुटा स्तदा ।

ब्रह्मा —

नतोस्मि नारायण देवदेव प्रपन्नसंरक्षणबध्दृदीक्ष ॥ 4

श्रियःपते शंकरपालक प्रभो खगध्वजा ऽनन्तगुणाय तुभ्यम् ।
सुरेशाय नमस्तुभ्यं गिरीशार्चितविग्रह ॥ 5

कल्याणाय विधीन्द्रार्क वंद्याय च नमोनमः ।
जयाश्रितार्तिघ्न हरे मुरारे जयाच्युतानंत विचित्रकर्मन् ॥ 6

जयामरेशाश्रित कल्पवृक्ष जयाखिलानंत निरूपमप्रभो ।
प्रसीद् लक्ष्मीश परावरेश प्रसीदनित्याव्यय निर्विकार ॥ 7

प्रसीद् गोविन्द गजेन्द्रबन्धो प्रसीद् कल्याणगुणाकरप्रभो ।
जितंते मुरारे सदाधार विष्णो ॥ 8

जितंते निराधार निर्द्वन्द्वशार्ङ्गिन् ।
जितन्ते जगन्नाथ कल्याणधामन् ॥ 9

जितंते विधीन्द्रार्क चन्द्रेशदेव ।
रक्षरक्ष जगन्नाथ शरणागत रक्षक ॥ 10

विक्रमाख्य दितेःपुत्रा द्रक्षरक्ष नमोस्तु ते ।
देवानां मानुषे लोके दानयज्ञादिकैर्नराः ॥ 11

तृप्तिं कुर्वन्ति देवेश बलिदानेन च प्रभो ।
तद्भंगश्चाप्यभू दस्य विक्रमाख्येन वै हरे ॥ 12

निस्सत्वाश्च भविष्यन्ति बलवन्तो दितेःसुताः ।
बलदर्पयुता दैत्याः हनिष्यन्ति च नःसदा ॥ 13

तस्मा त्वमति शीघ्रेण तस्य संहरणं कुरु ।
त्वां विना नैव पश्यामो द्विसप्तसु जगत्स्वपि ॥ 14

इत्युक्त्वा दण्डवद्भूमौ सुरैः साकं प्रणम्य च ।
तूष्णीमासी त्ततो ब्रह्मा बद्धाञ्जलिपुटो मुने ॥ 15

इत्थ मभ्यर्थितो विष्णुः ब्रह्मणा परमेष्ठिना ।
मेघगंभीरया वाचा प्रहसन्निद मब्रवीत् ॥ 16

श्रीहरिः :—

हनिष्यामि न संदेहः गह्वरस्थं महासुरम् ।
धैर्येण गच्छ सत्येश क्षणेनेति वदन्हरिः ॥ 17

प्रेषयामास तं हन्तुं स्वकरस्थं जलोद्भवम् ।
शङ्खस्सलक्षामित भानुदीधितिः शिशुक्षणेवाशु सुरारिविक्रमम् ॥ 18

गत्वा बिलस्थं स्थविराद्रिदेशे ददाह रक्षोधिपतिं सविह्वलं ।
तस्मात्सुरंगं कृत्वैव किंचि दाग्नेयदक्षिणे ॥ 19

योजनद्वितयान्ते तु रङ्गनाथस्य पश्चिमे ।
नातिदूरे रसां भित्वा न्यग्त्रोध तरुमूलके ॥ 20

बहिर्निर्गत्य तरसा दृष्ट्वा वै पृष्टतोऽद्भुतम् ।
स्वमनुद्रुत्य निर्यान्तं पाञ्चजन्यं महास्वनम् ॥ 21

चकार युध्दं दैत्येन्द्रः तेनसाकं द्विजोत्तम ।
हेतिराजो मुहूर्त्तान्ते तं हत्वा विननाद ह ॥ 22

दशतालप्रमाणोसौ निर्जीवः पतितो भुवि ।
देवा ननन्दुस्तरसातिकायं पतन्त मालोकयितुं द्विजेन्द्र ॥ 23
स्वभृत्यवर्गान्वित माधवेन ययु र्वटारण्य ममित्रकर्शिनः ॥

इति श्रीमद्भविष्योत्तरपुराणे क्षेत्रसारखण्डे
उपरिभागे वटरङ्ग माहात्म्ये
सप्तमोऽध्यायः

———

श्री

## अष्टमोऽध्यायः

श्रीसूतः —

दृष्ट्वा तं पतितं देवाः दशताल प्रमाणतः ।
आश्चर्य मीक्षितुं प्रापुः पाञ्चजन्यस्य वैभवम् ॥ 1

त्वं पुरा सागरोत्पन्नो विष्णुना विधृतः करे ।
नमितः सर्वदेवैश्च पाञ्चजन्य नमोस्तु ते ॥ 2

इति तैः प्रार्थितः सम्यक् पाञ्चजन्यो जवाध्दरेः ।
करस्थोभूद्यदा विष्णुः तच्छङ्ख क्षालनाय च ॥ 3

गङ्गादिसरितः सर्वा आहूयेदं वचोऽब्रवीत् ।
तिष्टध्व मत्वगर्ते हि यावच्चन्द्र दिवाकरौ ॥ 4

इत्युक्ता स्ता हृषीकेशस्याज्ञया विविशु द्विज ।
तत्पाञ्चजन्यं वैकुण्ठः प्रक्षाल्याऽसुरवैरिणम् ॥ 5

कुरुध्व मत्व संस्नानं शंङ्खतीर्थे ऽति पावने ।
इत्याज्ञप्ताः सुराः सर्वे स्नानं चक्रुः च विष्णुना ॥ 6

तदा प्रभृति तत्तीर्थं शंखतीर्थमिति द्विज ।
तत्र स्नानेन दानेन नरो भवति निर्मलः ॥ 7

विषुवायन पुण्येषु तर्पयेच्च तिलै स्सकृत् ।
पितॄश्च तत्क्षणादेव नयन्ति हरिमन्दिरम् ॥ 8

विष्वक्सेनादिकान्नत्वाताननुज्ञाप्य भक्तितः ।
स्नात्वा तु शंखतीर्थे यः पितॄन्नुद्दिस्य शौनक ॥ 9

न्यग्रोधवृक्षच्छायायां श्राद्धं कृत्वातु यो नरः ।
गयाश्राद्धं कोटिवारं कृतमेव न संशयः ॥ 10

वातपित्तादि रोगी च व्रणी कुष्टी च यो नरः ।
उन्मादी यो ह्यपस्मारी ग्रहैःसंपीडितो अपि ॥ 11
स्नात्वा मासत्रयं शंखतीर्थे पुण्यतमे द्विज ।
देवं नत्वा च संपूज्य रंगराजान मादरात् ॥ 12
मुच्यते सर्वपापेभ्यो नात्रकार्या विचारणा ।
शतपत्रैश्च कल्हारै श्चंपकै र्मल्लिकादिभिः ॥ 13
श्रीमद्भटपुराधीशं यः पूजयति मानवः ।
सर्वपातकयुक्तोपि स्नात्वा तज्जलजोद्भवे॥ 14
स सर्वपापान्निर्मुक्तः साक्षाद्विष्णु पदं व्रजेत् ।
अत्र ते कथयिष्यामि इतिहासं पुरातनम् ॥ 15
श्रण्वतां सर्वपापघ्नं सर्वमङ्गल दायकम् ।
पुरा विदेहनगरे विप्रोभूत् सर्वशास्त्रवित् ॥ 16
श्रौतस्मार्तविधानज्ञः विष्णुपूजा परायणः ।
बिष्णुकीर्तिं रितिख्यातः वैष्णवाचार तत्परः ॥ 17
तस्यपुत्रोऽथ कुशलः सङ्गीतनिपुणः शठः ।
नित्यनैमित्तिकभ्रष्टः सज्जनानां च दूषकः ॥ 18
सर्वविद्यासु निरतः सदा कैतव मानसः ।
कलाधर इति ख्यातो सामान्यस्त्रीरतः सदा ॥ 19
तदर्थं सर्ववित्तानि स्वगृहा दपहृत्य च ।
नित्यं दास्यति पापीया नन्यस्वमपि वै तथा ॥ 20
शौचाचारपरिभ्रष्टः तांबूलास्यः सदैव तु ।
मातरं पितरं हित्वा गृहं गृहगतां प्रियाम् ॥ 21
रूपयौवनसंपन्नां पतिभक्ता मनिन्दिताम् ।
ग्रामाद्ग्रामान्तरं गच्छन् तत्र तत्र विशेषतः ॥ 22
रूपयौवनसंयुक्तां सामान्य वनितां द्विजः ।
चौर्यं कृत्वा तत्र तत्र दत्वा क्रीडति नित्यशः ॥ 23

एवंसर्वत्रगो भूत्वा सर्ववर्णोद्भवासु च ।
संचरत्यति पापात्मा हित्वा च गृहसंपदः ॥ 24
तस्य पापानि लिखितुं न समर्थो यमोपि च ।
क्रमात्कवेरजातीरं प्राप्तो भूद्विजपुत्रकः ॥ 25
नारदेशस्थलं प्राप्य तत्रस्थ गणिकां शुभाम् ।
चकमे तां कंचित्कालं तत्रैव स्थिति माप्तवान् ॥ 26
कदाचि न्माघमासे तु नाम्ना हेमावती शुभा ।
विलासिनीनां प्रवरा विटं वाक्य मथाब्रवीत् ॥ 27
कलाधराख्य भोविप्र योजनद्वयपूर्वके ।
वटारण्यमिति ख्यातं क्षेत्रं श्रीरंग वल्लभम् ॥ 28
तत्क्षेत्रमागता काचि न्नाम्ना चित्रविलासिनी ।
सुरवेश्या समारूपे रूपेणाप्रतिमा भुवि ॥ 29
इति श्रुतं मया रात्रौ द्रष्टुं तां किल सांप्रतम् ।
इच्छाम्यहं त्वयासाकं संगीतनिपुणो यतः ॥ 30
यद्यागच्छसि सा त्वां च पूजयिष्यति नान्यथा ।
इत्युक्तो विस्मयाविष्टो वचनं त्विद मब्रवीत् ॥ 31
हेमावति श्रृणुष्व त्वं यत्रयत्र च गच्छसि ।
तत्रतत्र गमिष्यामि दासवत्ते न संशयः ॥ 32
त्वया विना क्षणमपि जीवामि खलु सुन्दरि ।
अन्तरं चावयो र्नास्ति सत्यं त्वयि शपाम्यहम् ॥ 33
इत्युक्ता सा तदा हृष्टा तेनसाकं ययौ शुभा ।
वटारण्यं ततोगत्वा नानाचित्रविलासिनीम् ॥ 34
माधुर्यालाप चातुर्य लास्याभिनयकोविदाम् ।
तुतोष नितरां विप्रो सापि हेमावती तथा ॥ 35

कश्चिद्ध दिवसात्तत्र तामानेतुं समावसत् ।
साध्येनां च द्विजं पूज्य चित्रविद्या विशारदम् ॥ 36
दत्वान्नपान वस्त्राणि ताम्बूलादीनि वै द्विज ।
तया संपूजितौ तत्र वासं चक्रतु रञ्जसा ॥ 37
एवंतयोः संवसतोः उत्सवावभृतोप्यभूत् ।
तस्मि न्सा रङ्गभक्त्या तु शङ्खतीर्थे सुपावने ॥ 38
उत्सवावभृथे स्नात्वा नाम्ना चित्रविलासिनी ।
रंगनाथालयं प्राप्ता तदा हेमावती शुभा ॥ 39
तस्याः प्रीतिकृते स्नात्वा शङ्खतीर्थे शुभावहे ।
एंतयो रुभयोर्मध्ये विप्र स्तत्र कलाधरः ॥ 40
स्नात्वा पुण्ड्राणि धृत्वा तु न्यग्रोधं च परिक्रमत् ।
ततस्तयो रङ्गपदारविन्द संदर्शनं कर्तुमुद्गच्छतो द्विजम् ॥ 41
पृष्टंसमाश्रित्य गतं ददर्श श्रीरंगशय्यान्वयज स्तदैव ।
तत्क्षणा त्कालदूताश्च नेतुमेनं समागताः ॥ 42
तदैव विष्णुदूताश्च तान् तिरस्कृत्य दूरतः ।
खगध्वजस्यन्दने तु स्थाप्य तं विष्णुसंनिधिम् ॥ 43
नेतुकामा न्समुद्दिस्य कालदूताः समब्रुवन् ।
कालदूताः— विष्णुदूता महाभागाः युक्तायुक्तविशारदाः ॥ 44
आजन्मपापिनं दुष्टं परस्त्री संगतत्परम् ।
त्यक्तपुण्यं कथं यूयं नेतु मेनं समुद्यताः ॥ 45
इत्युक्ता विष्णुदूता स्ते ह्यब्रुवन् यमकिङ्करान् ।
यूयं न जानीथ धर्मसूक्ष्मान् विष्णो र्द्विजोत्तमाः ॥ 46
अयं महापापरतोपि अपापो नास्त्य संशयः ।
यूयं तथापि भो दूताः मारुयां रंगस्य सन्निधौ ॥ 47

शङ्खतीर्थ वरस्नान मासीद्यस्माच्च ते तदा ।
वैकुण्ठवास योग्याः ते नात्रकार्या विचारणा ॥ 48
इत्युत्का तान् रथेस्थाप्य तं च सर्वविभूषणैः ।
वैकुण्ठं विष्णुदूतास्ते निन्यु स्तक्षण मेव हि ॥ 49
श्रीमत्सागरसंभवाख्य ममलं तीर्थं हरेर्वल्लभं ।
स्नाताना मिहचेष्ट सिध्दिफलदं देवारि दर्पापहम् ॥ 50
द्विसप्तलोकेषु न हीदृशं मुने गच्छाम सर्वे सकलार्थ दायकम् ।
न्यग्रोधकान्तार मितीरयन्ते संपूजयामास सुवस्त्र भूषणैः ॥ 51
ननाम सूतं परमादरेण तदैव सर्वैं मुनिशेखरै र्वृतः ।
कमनीयमुदाराङ्गं श्रीरङ्गेशं वटालयम् ॥ 52
श्रीशंख तीर्थं श्रीमच्चन्द्रतीर्थं मनुत्तमम् ।
मन्दस्मित स्फुरित मुखारविन्दं कंदर्पकोटि शतसुन्दर शान्तमूर्तिम् ॥ 53
भोगीन्द्रभोगेशयमादिदेव मालोकयामासु रतीव हृष्टाः ।
क्षेत्रंप्रशस्य च रंगनाथं संपूजयित्वा निगमैः सुरेशम् ॥ 54
संतुष्टुवु द्विजाः सर्वे ह्यसंमूढा गतभ्रमाः ।
य इदं पुण्यमाख्यानं श्रृणुया च्छ्रावयेदपि ॥ 55
सर्वाभीष्टान् अवाप्नोति श्रीरङ्गेशप्रसादतः ॥

इति श्रीमद्भविष्योत्तरपुराणे क्षेत्रसारखण्डे
उपरिभागे वटरङ्ग माहात्म्ये
अष्टमोऽध्यायः

॥ इति श्रीवटरङ्ग माहात्म्यं संपूर्णम् ॥

---

வடரங்கம் சீர்காழி தாலுகா

ஸ்ரீ

# வடரங்க ஸ்தல புராணம்.

## 1. க்ஷேத்திர மகிமை.

முன்னொரு காலத்தில் நைமிசாரண்யத்தில் சௌனகாதி முனிவர்கள், முனிபுங்கவரும், பிரம்மஞானியும், வேத சாஸ்திர விற்பன்னரும், சகல க்ஷேத்திரத்தின் மகிமையை அறிந்தவரும், யாகத்தில் வந்தவரும் ஆகிய ஸ்ரீசூதமுனிவரைக்கண்டு அர்க்கியம் பாத்தியம் முதலிய விசேஷ பூஜை செய்து நமஸ்கரித்து ஆனந்தக் கண்ணீர் பெருகப் புளகாங்கிதங்கொண்டு, "பிரம்ம புத்திரரே, புண்ணிய சொரூபியே, பிராம்மண சிரேஷ்டரே, மகாவிஷ்ணுவின் சரிதம் ஒருவன் கேட்டஅவ்வளவிலே சகலதோஷாதி பாவங்களும் நம்மை விட்டுத் தாமே நீங்கும்" என்று முன்னொரு காலத்தில் கங்கைக் கரையில் நாரத முனிவரால் சொல்லப்பட்டிருப்பதை நாங்கள் அறிவோம். ஆகையால் சகல க்ஷேத்திரத்தின் மகிமையை அறிந்த தாங்கள், வைகுண்டவாசியான சாக்ஷாத் மகாவிஷ்ணுவின் மகிமையை அடியேங்களுக்கு உபதேசித்து எங்களைப் புண்ணிய சாலிகளாக்கவேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டனர்.

இவ்வாறு விஷ்ணுவின் சரிதாம்ருதத்தைக்கேட்டு இன்புற வேண்டும் என்னும் பேராவல் கொண்ட முனிவர்களைப் பார்த்து "சௌனகாதி முனிவர்களே, நீங்கள் தெளிந்த சிந்தையுடன் நித்திய சொரூபியாகிய ஸ்ரீமந் நாராயணன் விஷயத்தில் ஈடுபட்டபடியால் நீங்கள் புண்ணியசாலியாவீர்கள். மேலும் லக்ஷ்மிபதியாகிய விஷ்ணுவின் சரிதத்தை யாகசாலை, புண்ணிய க்ஷேத்ரம், நதீதீரம், முதலிய இடங்களிலாவது பிராம்மணர்கள் மத்தியிலாவது, உற்சவ காலத்திலாவது கேட்டனுபவிக்கின்றவர்கள் யாவரும் உத்தமகதியாகிய முத்தியின்பத்தையும் சகல சம்பத்துக்களையும் எளிதில் பெறுவார்கள் என்பதில் ஐயமில்லை எனவும், பிர்ம்மஹத்தி முதலிய பாவங்களுக்கு வேறு பரிகாரம் வேண்டாம் எனவும், அக் கொடிய பாவத்தை ஒருக்கால் தவறிச்செய்தவரும் அப்பாவம் நீங்கி இன்பம் பெறுவார்" எனவும் "விஷ்ணுவின் சகஸ்ரநாமத்தைப் பாராயணம்

செய்தவர்களுக்குக் கிடைக்கும் பலன் முழுவதும் விஷ்ணுவின் சரிதத்தைக் கேட்டமாத்திரத்திலேயே கிடைக்கும்" எனவும் கூறினர்.

உலகத்தில் இஷ்ட காமியார்த்தங்களைக்கொடுக்கும் க்ஷேத்திரங்கள் பலவுள. அந்த க்ஷேத்திரங்களில் விஷ்ணுமூர்த்தி பல்வேறு நாமரூபம்கொண்டு எழுந்தருளியுள்ளனர். அவற்றுள் கலியுகத்தில் நூற்றெட்டுத்தலங்களே விசேஷமாயுள்ளன. நூற்றெட்டுத்தலங்களுள் இருபத்து நான்கும், இருபத்து நான்கினுள் பன்னிரண்டும் மிகவிசேஷித்த தலங்களாகும். அவைகள் ஸ்ரீரங்கம், தர்ப்பாரண்யம், ஸ்ரீமுஷ்ணம், சேஷபூதரம், (திருப்பதி) நைமிஷம், குருக்ஷேத்திரம், வடரங்கம் (வடாரண்யம்) ஸ்யானந்தூரம், (திருவனந்தபுரம்) தோதாத்ரி, ஆழ்வார் திருநகரி, காஞ்சீபுரம், கண்டிகாத்ரி, (நேபாளம்) பதரிகாஸ்ரமம், (Mount everest) என்பனவாம்.

இந்தப் பன்னிரண்டு க்ஷேத்திரங்களுள் வடாரண்யம் என்னும் இந்தக்ஷேத்திரமே மிகச் சிறந்தது. இத்தலம் மனதில் நினைத்த மாத்திரத்தில் சகல தோஷங்களையும் போக்கும். வாசம் செய்பவர்க்கு இஷ்ட சித்தியையும் வணங்குபவர்க்கு மோட்சத்தையும், தரிசித்தோர்க்கு ஞானத்தையும் கொடுக்கும். இது கீழ் சமுத்திரத்திற்கு மேற்கே ஒரு யோசனை தூரத்திலும் ஸுகந்த தேச ஸ்தலமாகிய திருவிழந்தூர் க்ஷேத்திரத்திற்கு ஒன்றரை யோசனை வடகிழக்கிலும், திருவிக்கிரம க்ஷேத்திரமாகிய தாடாளன்கோவிலுக்கு மூன்று குரோசம் வடமேற்கிலும், பாரத்துவாஜாஸ்ரமம் என்னும் சிதம்பரத்திற்கு ஒரு யோசனை தெற்கிலும், வரதராஜ க்ஷேத்திரத்திற்கு (பாப்பாக்குடி) அரையோசனை கிழக்கிலும் விளங்குகிறது.

இது நானாவித விருக்ஷங்களால் சூழப்பெற்று வண்டுகள் மொய்க்கும் பன்னிறப் பூக்களாலும் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. பறவை யினங்களும், விலங்கினங்களும் பகைமையின்றி உல்லாசமாய்க் காலங்கழிக்கின்றன. நன்னீர் ஓடும் ஓடைகளையும் தண்ணீர் நிறையும் தடாகங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. பார்த்த மாத்திரத்திலே பாவம் நீக்கும் பான்மைபெற்றது. தேவர்களும் இந்த க்ஷேத்திரத்தை மறப்பதில்லை என்றால் இத்தலத்தின் பெருமையைச் சொல்லவும் வேண்டுமோ ?

**தல விருட்சம்:** மற்றும் இத்தலம் கிருத யுகத்தில் சுற்றிலும் ஒரு யோசனை தூரம் ஆலமரங்களால் சூழப்பட்டுப் புன்னாகவனம் எனவும், திரேதாயுகத்தில் அரை யோசனை தூரம்

ஆலமரங்களால் சூழப்பட்டுத் துளஸீவனம் எனவும், துவாபர யுகத்தில் கால்யோசனை தூரம் ஆலமரங்களால் சூழப்பட்டு வகுளாரண்யம் எனவும், கலியுகத்தில் அரை குரோச தூரம் ஆலமரங்களால் சூழப்பட்டு வடாரண்யம் எனவும் பெயர் பெற்று விளங்கிவரும். இப்பொழுதோ இங்கே வட வீருட்சம் ஒன்றே உளது. இது பலவித வடிவமைப்போடு காணப்படுகிறது. தர்ம ராஜனுகிய இயமனும் தன் தூதர்களை "இத்தலத்தைச் சுற்றி நான்கு யோசனை தூரம் வரை போகாதீர்கள்" என ஆணையிட்டுக் கொண்டிருக்கிறுன்.

**காவிரி வரம் பேறல்:** முன்னெரு காலத்தில் சாக்ஷாத் கவேரனுடைய புத்திரியாகிய காவேரியானவள் வடரங்கத்தில் விளங்கும் விஷ்ணுவைத் தரிசனம் செய்வதற்காகச் சங்க தீர்த்தத்துடன் வடதிசைக்கு வந்து, ஸ்ரீரங்கநாதனை அடையவேண்டி ஏழு நாள் தவம் பண்ணினுள். ஸ்ரீமந் நாராயணன், அக்காவேரியின் தவநிலைகண்டு அழகில் மன்மதனே என்று சொல்லுமாறு ஆவணி மாதப் பௌர்ணமி யன்று எழுந்தருளித் தரிசனந் தந்து, "காவேரியே உனக்கு அகஸ்தியருடைய சாபம் விலகிவிட்டது. நீ உன் கணவனிடம்போய்ச் சுகமாய்க் காலங்கழிப்பாய்" என்று ஆசீர்வதித்தார். காவேரியும் தன் கணவனுகிய சமுத்திர ராஜனிடம் போய்ச்சேரக் கீழ் திசை நோக்கிப் புறப்பட்டாள்.

**வசிஷ்டர் பிரதிக்ஞை:** அச்சமயம் வசிஷ்ட முனிவர் புத்திர சோகத்தினுல் அதிகாலையில் கங்கையில் ஸ்நானம் செய்து உச்சிக் காலத்தில் ஸ்ரீரங்கநாதனைப் பூசித்து, மாலைக்காலத்தில் (பிரதோஷகாலத்தில்) சேதுவில் ஸ்நானம் செய்து, புத்திரசோகத்தால் ஏற்பட்ட மனத்துயரை மாற்றிட எண்ணி, அதிகாலையில் காசியில் ஸ்நானம் செய்துவிட்டுப் புறப்பட்டார். ஸ்ரீரங்கமோ ஆறு யோசனை தூரத்திற்கு அப்பாலுள்ளது. உச்சிக்காலமோ அணுகிவிட்டது. நீருண்டமேகமோ மின்னல் மின்னியும் இடி இடித்தும் மழையைப் பொழிந்தது. இருளோ எங்கும் நிறைந்தது. அந்தச் சமயத்தில் வடாரண்யம் வந்து சேர்ந்தார். உடனே லவனும் குசனும் அரசாளும் சிறப்பைப்பெற்ற இந்த க்ஷேத்திரத்தைத் தரிசித்துவிட்டுப்போகவேண்டும் என்றும், பின்னுல் எண்ணியபடி முடிப்போமென்றும், அதுவும் முடியாமற்போனுல் தன்னுயிரையே தியாகம் செய்துகொள்ளவேண்டும் என்றும் உறுதிசெய்துகொண்டார். வசிஷ்ட முனிவரின் உறைப்பான மன நிலையைக்கண்ட ஸ்ரீரங்கநாதனும் "இதோ நானே நானே" என முனிவர் முன் தோன்றித் தரிசனம் கொடுத்தார்.

## 2 வசிஷ்டர் அருள்பெற்றது.

---

சாக்ஷாத் மகாவிஷ்ணுவானவர், தன் எண்ணம் நிறைவேறாமையால் உயிரைத் தியாகம் செய்யச் சித்தமாயிருக்கும் வசிஷ்ட முனிவரின் கைகளைப் பிடித்துக்கொண்டு, "வசிஷ்டரே என்ன காரியம் செய்தீர்? இவ்வாறு பிடிவாதம் செய்தல் கூடாது" என்று சொல்லித் தடுத்தருளினர். பெருமான் தன்னைத் தொட்டமாத்திரத்திலேயே சகல துக்கங்களும் நீங்கப்பெற்று விஷ்ணுவின் திருவடிகளில் விழுந்து வணங்கித் தோத்திரம் செய்தார்.

"விஷ்ணுமூர்த்தியே, நான் புத்திர சோகத்தினால் நீண்ட நாளாக, காலையில் காசியில் ஸ்நானம் செய்தும், மத்தியான காலத்தில் ஸ்ரீரங்கநாதனைத் தரிசித்தும், சாயங்காலத்தில் சேது ஸ்நானம் செய்தும், இந்நாள் வரையிலும் நிறைவேற்றிவந்த என்னுடைய நிபந்தனை இன்றையதினம் நிறைவேறாமையால் உயிர் விடப்போகிறேன்" என்று சொன்னர். உடனே விஷ்ணுமூர்த்தி வசிஷ்டருடைய வார்த்தையைக் கேட்டதும் புன்சிரிப்புடன், "வசிஷ்டரே உம்முடைய சபதம் வீண்போகாமலிருக்கவே நான் இவ்விடத்தில் உமக்குத் தரிசனம் தந்தேன். இதோ உம் எதிரில் நிற்கும் புன்னாக விருட்சத்தையும், அதோ அக்கினி மூலையிலுள்ள சந்திர தீர்த்தத்தையும் நன்கு பாரும். எனக்கு இது ஒரு சிறந்த க்ஷேத்திரமாகும். தென்னரங்கத்திலும் விசேஷ மகிமை வாய்ந்ததும் ஆகும்" என்று எடுத்துரைத்தார்.

விஷ்ணுவின் அனுக்கிரகத்தைப் பெற்ற வசிஷ்ட முனிவரும் ஆனந்தக்கண்ணீரால் உடல் முழுதும் நனையப் பெற்று, "ஸ்ரீரங்கநாதா, தாங்கள் பிரளயபர்யந்தம் இவ்விடத்திலேயே வடன், என்னும் பெயருடன் எழுந்தருளவும், இந்தப் புன்னாக விருட்சம் வட விருட்சமாகத் திகழ்ந்து வேண்டிய பலன்களைக் கொடுக்கவும், என்னுடைய ஸ்நானம் தரிசனம் எல்லாம் சம்பூர்ணமாகவும் அருள்செய்ய வேண்டும்" என்று பிரார்த்தித்தார். பெருமானும் அப்படியே ஆகட்டும் என்று அருள்செய்தார்.

**ஆலய நிர்மாணம்:** உடனே வசிஷ்டர் தன்னுடைய தபோமகிமையினால் தேவலோகத்திலிருந்து விசுவகர்மா என்னும் தேவ தச்சனை வரவழைத்து, மிக்க அழகான ஆலயமொன்றை நிர்மாணிக்கும்படி கட்டளையிட்டார். முனிவரது ஆணையைச் சிரமேற்கொண்ட தேவதச்சனும் 'ஓம்' என்னும் பிரணவத்தை

உச்சாடனம் செய்து ஸ்ரீரங்கநாதனை ஸ்மரித்தபின்னர், முறையே ஏழு பிராகாரங்களும் பற்பல கோபுரங்களும் த்வஜஸ்தம்பங்களும் மஹாமண்டபங்களும், லக்ஷணம் பொருந்திய கர்ப்பக்கிருஹங்களுடனே நிர்மாணம் செய்தும், திவ்ய ரதங்கள் வாஹனாதிகள், பல்லக்குகள், மஞ்சங்கள் முதலான ஆலயத்துக்கு வேண்டிய இதர உபகரணங்களையும் அமைத்தும், தீர்த்தக்கரை மண்டபங்கள் ஸ்தலவிருக்ஷ மேடை, தேரோடும் வீதிகள், அக்கிரகாரங்கள் இவற்றை நிருமித்தும், சபாமண்டபம், ஆஸ்தானமண்டபம், திருமடைப்பள்ளி இவற்றை ஏற்படுத்தியும் ஆலயத்தை அமைத்து முனிவரை வணங்கி விடைபெற்றுக்கொண்டு விண்ணுலகம் போய்ச் சேர்ந்தான்.

திருவிழாச்சிறப்பு: பின்னர் வசிஷ்ட மகரிஷியானவர் உத்தரவாஹினியான காவிரி நதியில் ஸ்நானம் செய்து, வடவிருக்ஷத்தின் கீழமர்ந்து ஊர்த்வ புண்டரம் தரித்துப் பக்திசிரத்தையுடனே அஷ்டாக்ஷர மந்திரத்தை ஜபம் செய்யத் தொடங்கினார். வைகாசிமீ சித்திரை நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் விஷ்ணுவுக்குத் துவஜாரோகணம் செய்து திருவிழாவைத் தொடங்கினார். வாஹனம், பல்லக்கு முதலானவற்றில் மூர்த்தியை எழுந்தருளச் செய்து வேதகோஷம், சாஸ்திரகோஷம், வாத்தியகோஷம் இவைகளுடன் நகர்வலஞ் செய்வித்து, அன்னதானாதிகளாலும் பரிமள புஷ்பங்களாலும், விசேஷமான நிவேதனங்களாலும், தூபதீபம், சத்திரம், சாமரம், பூர்ணகும்பம், முதலிய உபசாரங்களாலும், உத்ஸவத்தைச் சிறப்பித்து விமரிசையாய் நடத்தினார். திருவிழாவின் ஒன்பதாவது தினத்தில் ரத உத்ஸவத்தையும் நடத்தி, விஷ்ணுவின் நக்ஷத்திரமான திருவோண நக்ஷத்திரத்தில், சங்க தீர்த்தத்தில் தீர்த்த உத்ஸவத்தையும் நிகழ்த்தினார். (சங்கதீர்த்தமென்பது மஹாவிஷ்ணுவால் உண்டாக்கப்பட்ட புண்ய தீர்த்தம்) பிறகு விதிப்படி பெருமானுக்கு மஹாபிஷேகம் நடத்திவைத்தார். பிராமணர்களுக்குப் பசு, பூமி, வஸ்திரம் முதலானவற்றைத் தானம் செய்து, அவர்களுக்குத் திருப்திகரமான போஜனம் அளித்து, தக்ஷிணை, தாம்பூலம் பல தானம் முதலியவற்றை வழங்கினார்.

பின்பு நித்திய பூஜைகளையும் மாத பூஜைகளையும் உத்ஸவத்தைப் போலவே விமரிசையுடன் நடத்தினார். நித்திய பூஜைகளைச் சிறப்பாக நடத்துவதற்காகப் பத்து கிராமங்களை நியமித்தார். மாசிமீ மகோத்ஸவம் நடத்துவதற்கென ஏராளமான திரவியங்களைச் சமர்ப்பித்தார். பிறகு பக்தியுடன் விஷ்ணுமூர்த்தியை நமஸ்கரித்து அனுமதி பெற்றுக்கொண்டு ரிஷிமண்டலத்தை

அடைந்தார். இப்பொழுதும் காணப்படுகின்ற இந்த க்ஷேத்திரத்திற்குச் சமானமான க்ஷேத்திரம் மூன்றுலகிலும் இல்லை என்றும் ஸர்வமங்களத்தையும் கொடுக்கக்கூடியதென்றும் ஸ்ரீ சூத மகரிஷியானவர் ஸ்ரீ சௌனகமகரிஷிக்குச் சொன்னார்.

## 3. காவேரி வந்த வரலாறு.

சௌனகாதி முனிவர்கள் சூதமுனிவரைப் பார்த்து முக்காலத்தையும் உணர்ந்த மூர்த்தியே, தாங்கள் சொல்லிவந்த சரிதத்தை முற்றும் கேட்டு மகிழ்ந்தோம். ஆயினும் காவேரிக்கு எக்காரணத்தினால் அகஸ்தியரால் சாபம் ஏற்பட்டது? யாருடைய போதனையினால் எப்போது அக்காவேரி இந்த க்ஷேத்திரத்திற்கு வந்தாள்? இந்த விபரத்தையும் தெளிவாக எங்கட்கு எடுத்துரைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ள, சூதமுனிவர் சொல்லத் தொடங்கினார்.

**காவேரியின் தவநிலை :** முன்னொரு காலத்தில் காவேரியானவள் தான் " கங்கையைக்காட்டிலும் மேன்மையாய் விளங்க வேண்டும்" என்ற நோக்கத்துடன் மலயபர்வதத்தில் கடுந்தவம் செய்தாள். அப்போது பிரம்மாவினுடைய போதனையினால் அகஸ்திய முனிவர் மலயபர்வதத்தில் காவேரி தவஞ்செய்யும் இடத்தை நாடிக்காவேரியைப்பார்த்துக் காதலுற்று, தான் அவளை விவாஹம் செய்துகொள்ளவேண்டுமென்ற எண்ணங்கொண்டார். மலயபர்வதத்தில் கோவைப்பழம் போன்ற உதடுகளையும், தாமரையைப்போன்ற முகத்தையும், வண்டுகள் போன்ற கறுத்த கூந்தலையும், மன்மதவில் போன்ற புருவங்களையும், வில்வப்பழம் போன்ற ஸ்தனங்களையும், சிங்கம் போன்ற இடையினையும், யானைத் துதிக்கைபோன்ற தொடைகளையும் உடைய செவ்விய அழகுவாய்ந்த இந்தக்காவேரி இளமைப்பருவத்தை வீணாக்கி விஷ்ணுவைக் குறித்துத் தவஞ் செய்வது யாது நோக்கியோ? என வியந்து மன்மத விகாரத்தால் ஏற்பட்ட மோகவலையிற் சிக்குண்டார். பின்னர் தவஞ்செய்யும் அம்மங்கையை நோக்கி, பெண்ணே, "உன் கடைக்கண்ணால் என்னைப் பார். பிரம்மதேவரது ஆக்ஞையினால் நான் இங்கு வந்தேன். நான் அகஸ்திய முனிவர் என்பதை நன்றே தெரிந்துகொள். நீ எனக்குற்ற மனைவியாகவேண்டும்" என்று சொல்லிக் காவேரியின் கையைப்பிடித்துச் சற்றே அசைத்தார்.

**அகத்தியரது சாபம் :** தன்னை மறந்து தவத்திலேயே தன் மனத்தைச் செலுத்தி அசைவற்றிருந்த காவேரிக்கு அகஸ்தியர் சொன்ன சொல் ஒன்றும் கேட்டிலது; ஆதலால் பதில் ஒன்றும் சொல்லாமலிருந்தாள். முனிவர் பெருமானுக்குக் கோபம் மூண்டது. கண்ணிரண்டும் சிவந்தது. பற்களைப் 'படபட' என்று கடித்துக் கொண்டு "என்னை அவமதித்தமையால், எந்தக்காலத்திலும் உனக்குப் புருஷன் இல்லாமல் போகக்கடவது" என்று சபித்து விட்டுத் திரும்பினர். அவ்வமயம் காவேரியானவள் திடீரென்று கண்ணைத்திறந்து பார்த்தாள். அடங்காத கடுங்கோபத்துடன் தன் முன்நிற்கும் அகத்தியரைக்கண்டு "மகரிஷியே தயவுசெய்து என்னை மன்னிக்கவேண்டும். நானோ கங்கையினும் மகிமைபெற வேண்டித் தவம் புரிந்தேன். தவத்திலேயே ஈடுபட்டிருந்தபடியால் தாங்கள் வந்ததை அறியேன். ஆகையால் என்னைப்பாதுகாக்க வேண்டும் என்று துதித்து, சகல பதிவிரதாஸ்திரீகளுக்கும், ஸாக்ஷாத் நாராயணனே பதியாவார் என்பது தாங்கள் அறிந்த விஷயம். பதியாகிய நாராயணனுடைய சல்லாபத்தினால், இகத்திலும் பரத்திலும் சுகம் அடையலாம். ஆகையால் இந்தச் சாபத்தினின்றும் விடுதலைபெற்று உய்யும்படி அருள்புரியவேண்டும். நான் ஒரு அம்சத்தினால் தங்கட்கு மனைவியாகப் போகிறேன்" என்று விண்ணப்பித்தாள். காவேரியின் உண்மை நிலையினைக்கண்ட முனி புங்கவரும் கோபம் அடங்கிச் சாபவிமோசனம் பெறுவதற்கேற்ற உபாயம் கூறினர்.

**சாபவிமோசனம் :** "காவேரியே, கிழக்குச் சமுத்திரத்திற்கு ஒரு யோசனை மேற்கிலும், ஸுகந்தவன க்ஷேத்திரத்திற்கு வடகிழக்கிலும், திருவிக்ரம க்ஷேத்திரத்திற்கு வடமேற்கிலும், பரத்துவாஜாஸ்ரமத்திற்குத் தென்திசையிலும் உள்ள ஓரிடத்தில் சங்க தீர்த்தக்கரையில் பிரமன் முதலான யாவருக்கும் அருள் செய்யவேண்டி ஸ்ரீரங்கநாதப்பெருமாள் எழுந்தருளியுள்ளார். அவ்விடத்தில் புன்னாக விருக்ஷமானது ஆல விருக்ஷமாகக் காணப்படும். அந்த ஆல மரநிழலில் சேஷசயனத்தில் பெருமான் பள்ளி கொண்டிருக்கிறார், நீ அந்த ரங்கநாதனுக்கு மாலை சூட்டியதுபோல அந்த க்ஷேத்திரத்திற்குச் சென்று சங்க தீர்த்தத்துடன் கலந்து ஏழு இராத்திரி அப்பெருமானைப் பூஜைசெய், நீ அந்த க்ஷேத்திரத்தில் வாசம் பண்ணுவதாலும், சங்கதீர்த்தத்தின் சேர்க்கையாலும், ஸ்ரீ ரங்கநாதனின் சேவையாலும் உன் பதியின் சல்லாபத்தை அடையலாம்" என்று அகஸ்தியர் சொன்னர்.

**காவேரியின் தவப்பேறு :** சாப விமோசனத்திற்கான உபாயத்தைப் பெற்ற காவேரியும், கைகளைக்கூப்பி நமஸ்கரித்து,

"முனிபுங்கவரே நான் ஒரு அம்சத்தினல் தங்களுக்குப் பார்யை ஆகிறேன் இன்னும் கொஞ்சகாலம் தவம் புரிந்து விஷ்ணுவிடத்தி லிருந்து கங்கையினும் புனிதமான ஓர் மகிமையைப் பெற்று உம்மோடு பிரம்ம மலேயிலிருந்து பிறகு, வசிஷ்டருக்கு அனுக்ரகம் அளித்த ஸ்ரீரங்கநாதனை ஆராதித்து அவருடைய அருட்பிரசாதம் பெற்றுக் கடைசியாகச் சமுத்திரராஜனிடம் போய்ச்சேர்வேன்" என்று அம்முனிவரிடம் சொல்லிவிட்டு, மீண்டும் தவஞ்செய்யத் தொடங்கினள். அகத்திய முனிவரும் அவ்விடத்திலேயே கொஞ்ச காலம் தங்கியிருந்து, ஸஹ்ய கன்னிகையான காவேரியின் ஓர் அம்சமான லோபாமுத்திரையை விவாகம் செய்து கொண்டார். காவேரியும் தன் தபோபலத்தால் கங்கையைக் காட்டிலும் மேன்மை யைப் பெற்று அகஸ்தியரோடு பிரம்ம மலேபோய்ச்சேர்ந்து பின் னர் வெகுவேகத்துடன் புறப்பட்டு, ஸ்ரீரங்கநாதனை சேவிக்கும் நோக்கத்துடன் வடாரண்ணியம் வந்து சேர்ந்தாள்.

---

## 4. உத்தரவாஹினியின் மகிமை.

---

பெருமாள் காட்சி தந்தது: காவேரியானவள் வடா ரண்ய க்ஷேத்திரத்தின் மகிமையைப் பார்த்து, அவ்வனத்தின் மத்தியில் பள்ளிகொண்டிருக்கும் ஸ்ரீரங்கராஜாவினுடைய தென் பாகத்தில் உட்கார்ந்து, விஷ்ணுவின் மாயையினல் மோஹிக்கப் பட்டு அகஸ்தியரால் சொல்லப்பட்ட சங்கதீர்த்தம் எங்கே உள்ளது? யாது செய்வேன் எவ்வாறு அந்தத் தீர்த்தத்தைப் பார்ப்பேன்? எப்போது சாப விமோசனம் பெற்று எனது பர்த்தாவைச்சேர்வேன்? என்று மனங்கலங்கித் தவிக்கும்பொழுது, "காவேரியே, மனங்கலங்காதே ஸ்ரீரங்கநாதனுடைய கோவிலின் மேற்புறத்தில் சங்கம் என்ற பெயருடனே ஒரு புண்ணிய தீர்த்தம் உளது, நீ அங்கே போய்ச் சாப விமோசனம் பெறுவாய்" என்று ஒரு அசரீரி எழுந்தது. உடனே காவேரி 'விஷ்ணுவின் வாக்கியமே இது' என்று மிக்க சந்தோஷத்துடன் புறப்பட்டு வடக்கு முகமாகப் போய்க்கொண்டிருக்கும் சங்க தீர்த்தத்தில் கலந்து ஐப்பசி மாதம் சுக்கில பக்ஷம் நவமி திதியன்று சந்திரனையும் ஸ்ரீரங்கநாதனையும் வணங்கிச் சங்கதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து மௌனவிரதம் பூண்டு தினந்தோறும் பெருமானை நூற்றெட்டுத் தடவை பிரதட்சணம் செய்து தூபதீபங்களாலும், பாயஸம் முத லிய நிவேதனங்களாலும், மகாபிஷேகங்களாலும், ஸ்ரீரங்கநாதனை யும் ஸ்ரீரங்கநாயகியையும் வழிபட்டு வந்தனள்.

இவ்வாறு காவேரி வழிபட்டுவரும் ஏழாம் நாள் இரவு பௌர்ணமியில் ஸ்ரீ ரங்கநாதப்பெருமான் ஸ்ரீஜம்புநாதருடனும், மற்றும் பரிவாரங்களுடனும், பேரி முதலிய வாத்ய கோஷங்கள் கோஷிக்க ஆயிரம் மன்மதன் சேர்ந்து வந்தாற்போன்ற அவ்வளவு பேரழகுடன் காவேரியின்முன் தோன்றிக் காட்சி தந்தார். காவேரியும் சங்கு சக்ர முதலியவற்றைக் கரத்தில் தாங்கித் தேவ குழாங்களுடன் கருடன்மீது எழுந்தருளிக் காட்சி தந்த விஷ்ணுவைப் பக்தியுடன் துதி செய்தாள்.

உடனே பெருமான் காவேரியைப்பார்த்து, "மகா பதிவிரதையே, "நீ செய்த பூசையை ஏற்றுக்கொண்டு மிகவும் மகிழ்ந்தோம். உனக்கு வேண்டுவது யாது?" என்று கேட்டார். பெருமானது அன்பு கனிந்த வார்த்தையைக் கேட்ட அளவிலேயே மிகவும் மகிழ்ந்து, "என்னுடைய பர்த்தாவான சமுத்திரராஜன் என்னிடம் எப்போதும் அன்பாயிருக்கவேண்டும். இந்த உத்தரவாஹினியில் பஞ்சபாணதீர்த்தத்தில் ஸ்நானம் செய்கிறவர்களுக்கு அஷ்ட ஐஸ்வரியங்களைக் கொடுக்கவேண்டும். சங்க தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணுபவர்களுக்குச் சர்வாபீஷ்டங்களையும் கொடுக்கவேண்டும். சங்க தீர்த்தத்தில் பௌர்ணமியில் ஸ்நானம் செய்பவர்களுக்குக் கோடி தடவை கங்கையில் ஸ்நானம் செய்த பலனைக் கொடுக்க வேண்டும். புத்திரப்பேறில்லாத பெண்கள் சங்க தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து ஐப்பசி மாதம் சுக்கில பட்சம் வெள்ளிக்கிழமையில் ஸ்ரீதேவிக்கு மாவிளக்குப்போட்டுக் குங்குமத்தினுல் அர்ச்சனை செய்து மௌனமாக நூற்றெட்டுத்தடவை பிரதட்சிண நமஸ்காரம் செய்து வழிபட்டால் அவர்களுக்கு 'மன்மதனோ?' என்னும் வடிவமைப்போடு கூடிய புத்திரப் பிரஜைகளைக் கொடுத்தருளவேண்டும். கருவினில் மரித்த சிசுக்களைப் பிரசவிக்கும் மலடியாயினுங்கூட நீண்ட ஆயுளோடு கூடிய புத்திரசந்தானத்தைப் பெறும்படி அருள வேண்டும்" என்று சிறந்த பல வரங்களையும் கேட்டாள். பெருமானும் அங்ஙனமே வேண்டிய வரங்களைக் கொடுத்தார். வரங்களைப் பெற்று மகிழ்ந்த காவேரியும் ஸ்ரீ ரங்கநாதனை வணங்கி விடை பெற்றுத் தன்னுடைய பர்த்தாவான சமுத்திரராஜனிடம் போய்ச் சேர்ந்தாள். அன்றைய நாள் முதல் காவேரி நதியானது சங்கதீர்த்தத்துடன் கலந்து, 'உத்தரவாஹினி' என்ற பெயருடன் இன்று வரை விளங்குகிறது. அந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்த அவ்வளவிலே குஷ்டரோகிகளும் ரோகம் நீங்கிச் சுகமடைவார் என்று சூதமுனிவர் எடுத்துச் சொன்னுர்.

**சந்திரகீர்த்தி வரலாறு:—** உடனே சௌனகாதி முனிவர்கள் சூதமுனிவரைப்பார்த்து "யாருக்கு எந்தத் தோஷத்தினால் குஷ்டரோகம் உண்டாயிற்று? இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணினால் ரோகம் நீங்கிவிடும் என்று சொன்னது யார்? இந்த வரலாற்றைத் தெளிவாக எடுத்துரைக்கவேண்டும்" என்று கேட்டார்கள். இவ்வாறு க்ஷேத்திர மகிமையை மிகுதியான உற்சாகத்துடன் கேட்கும் சௌனகாதிகர்களைப் பார்த்துச் சௌனகர்களே முன் காலத்தில் சௌராஷ்ட்ர தேசத்தில் சந்திரகீர்த்தி என்ற ஒரு அரசன் இருந்தான். அவன் அழகிலும், குணத்திலும் கல்வி செல்வம் என்னும் இருவகை நிதியிலும், வில்வித்தையிலும் சிறந்தவன். அரசர்கள் எல்லாரையும் வென்று கொண்டுவந்த நிதிகளைக் குடிமக்களுக்குக் கொடுத்துக் காப்பவன். எந்தத்தலத்தில் ஸ்வல்ப பலன் கிடைக்குமோ அந்த ஸ்தலத்தை ஒரு தடவைத் தரிசித்த மாத்திரத்தில் கோடி பலன் கிடைக்கச்செய்யும் தர்மசீலன். யாகாதி காரியங்கள் செய்வதிலும் முதன்மைபெற்றவன். லக்ஷ்மிநாதனாகிய விஷ்ணுவை வழிபடுவதில் மிகச் சிறந்தவன். இவன் கீர்த்தி பரவாத இடமே இல்லை. இத்தகைய பெருஞ் சிறப்புற்ற ராஜன் முன் ஜென்ம பாபத்தினால் குஷ்டரோகமுள்ள புதல்வனைப் பெற்றிருந்தான். ஆனால் அந்த வமிசத்துக்கு அவனைத் தவிர வேறு பிள்ளையும் இல்லை. குண நலத்தாலும் அறிவுத் திறத்தாலும் மிகச் சிறந்தவனாய் இருந்தபோதிலும் ரோகம் காரணமாகப் பலராலும் வெறுக்கப்படுவான். அரசனோ தன் புத்திரனால் கவலையுற்றவனாய் பட்டாபிஷேகம் செய்ய மனமற்றவனாய்த் தினமும் மிக்க வியாகூலம் அடைந்து தன் மனைவியோடு பைத்தியம் பிடித்தவன்போலானான்.

## 5. அரசகுமாரன் அருள்பெற்றது

இவ்வாறு சந்திரகீர்த்தி துக்கப்பட்டுக் கொண்டிருக்கும் பொழுது மந்திரிகள் அரசனைப்பார்த்து அரசே, ஏன் துக்கப்படுகிறீர்கள்? அதன் காரணத்தைச் சொல்லும் அதற்கான உபாயங்களைத் தேடுகிறோம்" என்று விண்ணப்பித்தார்கள். அரசன் "என்னுடைய துக்கத்தைப் போக்கக்கூடியவர் இம்மூன்று லோகத்தும் இல்லை. எனக்கோ ஒரே குமாரன், அவனோ குஷ்டரோகியாய்விட்டான். நான் என் செய்வேன், எவ்வாறு பட்டாபிஷேகம் செய்வேன்? பிறர் கண்ணால் பார்ப்பதற்குக்கூட யோக்கியமல்லாத என் மகன் அரசாட்சி செய்ய யோக்கியமற்றவனாகின்றான். குஷ்டரோக

முள்ளவனைப் பார்த்தவர்கள் பட்டு வஸ்திரம் தரித்திருந்தாலும் அதனுடன் ஸ்நானம் செய்து சூரிய நமஸ்காரம் செய்யவேண்டும் என்றும், சூரியனுடைய பிரதி பிம்பத்தை நெய்யில் பார்த்துத் தரிசனம் செய்யவேண்டும் என்றும், சரீரத்தின் மேற்புறத்தில் தோஷமுள்ளவர்களை உதயகாலத்தில் பார்த்தவர்கள் தாங்கள் ஜன்மமுதல் சம்பாதித்த புண்ணியங்களை இழப்பார்கள் என்றும், குஷ்டரோகியைக் காலையில் பார்ப்பவர்கள் உடனே தலை முழுகி மற்றவர்களைப் பார்க்கவோ அல்லது அவர்களுடன் பேசவோ கூடாது என்றும் விதி யிருக்கிறபடியால் என் மகன் அரச பதவிக்குத் தகுதி யற்றவனானன் மற்றும் வேறு புத்திரனும் எனக்கு இல்லையே'' என்று எடுத்துச் சொன்னன்.

**காஸ்யபர் வருகை :—** இவ்வாறு மந்திரிகளின் மத்தியில் அரசன் வருந்திக்கொண்டிருக்கும்பொழுது காஸ்யபமுனிவர் தெய்வாதீனமாய் அரசன் இல்லத்திற்கு வந்து சேர்ந்தார். அரசன் முனிவர் வருகையைக் கண்டதும் பாதங்களில் விழுந்து வணங்கி முனிவர் பெருமானே, தாங்கள் அடியேனது குடிசை நோக்கிவந்த காரணம் யாது ? எனக் கேட்டான். உடனே முனிவர் ''அளவற்ற செல்வங்களைக்கொண்டு நடத்தவேண்டிய ஒரு யாகத்திற்கு உம்மிடத்தில் வேண்டிய பொருளை வாங்கிக்கொண்டுபோக வந்தேன்'' என்று அரசனிடம் தெரிவித்தார். அரசனோ தன் உள்ளத்திற் குடிகொண்ட கவலையின் மிகுதியால் ஒன்றும் சொல்லாமல் இருந்தான்.

யாதொரு விதமான பதிலும் சொல்லாமல் இருந்த அரசனது மனோபீஷ்டத்தை ஞானதிருஷ்டியால் உணர்ந்த முனிவர் அரசனைப்பார்த்து, "தற்போது உன் மகனுக்கு ஏற்பட்டுள்ள குஷ்டரோகம் நீங்குவதற்கு ஒரு தக்க உபாயம் சொல்லுகிறேன். அதாவது கிழக்குச் சமுத்திரத்திற்கு மேற்கே சம்பகேச க்ஷேத்திரத்திற்கு அக்கினி மூலையில் சீர்காழிக்கும் திரிவிக்ரம க்ஷேத்திரத்திற்கும் மேற்கே காவேரிக் கரையில் ஒரு சிறந்த தலம் இருக்கிறது. அந்தத் தலத்தில் லோகநாதனாகிய விஷ்ணு நித்திய வாசம் செய்கிறார். அந்தத் தலத்திற்கு மேற்கில் காவேரி நதியில் சங்க தீர்த்தம் என்று சொல்லக்கூடிய விசேஷ தீர்த்தம் ஒன்று உண்டு. நீ சீக்கிரம் அங்கே போய் விஷ்ணுவைப் பக்தியோடு வணங்கி வைகாசிமாதம் சிரவண நக்ஷத்திரத்தில் நடைபெறும் தீர்த்தோத்ஸவத்தில் உன் மகனை ஸ்நானம் பண்ணும்படி செய். ஆங்குள்ள ஆலமரத்தின் அடியில் கம்பளதானம் பண்ணும்படிசெய். ரோகம் நீங்கிச் சுகம் பெறுவான்.'' என்று உபாயம் கூறினர்.

மேலும் ரோகம் உண்டானதற்குக் காரணம் சொல்லுவேன் அதாவது உன்மகன் ஏழு ஜன்மத்துக்கு முன் மகா தரித்திரனான அதமப்பிராமணனாயிருந்தான். இவன் காசியில் உழுதுபயிர் செய்வதையே தன்னுடைய ஜீவனோபாயமாகக் கொண்டான். ஆனாலும் மகா பாபி. மண்வெட்டி செய்வதற்கு இரும்பு அகப்படாமையால் எப்படி சாகுபடி செய்வது என்று ஏக்கம் கொண்டிருந்தான். திடீரென்று ஒரு யோசனை அவனுக்குத் தோன்றிற்று. ஒருநாள் இரவில் வீதியில் போய்க்கொண்டிருக்கும்பொழுது ஒரு விஷ்ணு ஆலயத்தின் அழகிய ரதத்தைப் பார்த்தான். அதில் உள்ள இரும்புத்துண்டு ஒன்றைக் கொண்டுவந்தான். அதைக்கொண்டு மண்வெட்டி செய்து பயிர்த்தொழிலை மேற்கொண்டு ஜீவனம் செய்துவந்தான். அந்த விஷ்ணு ஆலயத்திற்குரிய இரும்பை அபகரித்த தோஷத்தினால் உன்மகன் குஷ்டரோகம் உள்ளவனானான். ஆகையால் தாமதம் பண்ணாமல் ரோகநிவாரண ஸ்தலமாகிய வடரங்கம் செல்வாய்; நானும் யாகத்துக்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்யவேண்டும் என்று முனிவர் சொன்னார். உடனே அரசனும் அளவில்லாத செல்வங்களை முனிவர் பெருமானுக்கு அளித்தான். காஸ்யபமுனிவரும் திரவியங்களைச் சேகரித்துக் கொண்டு யாகம் செய்ய எண்ணித் தமது ஆஸ்ரமத்துக்குச் சென்றார்.

ரோக நிவர்த்தி :— சந்திரகீர்த்தியும் முனிவர் சொன்னவாறே தன்னுடைய சேனைகளோடு புத்திரனை அழைத்துக்கொண்டு வடரங்கம் வந்து சேர்ந்து சகல தேவர்களால் பூஜிக்கப்பட்டவரும், சங்கு சக்ர கதாபாணியும், பாம்பின்மீது பள்ளிகொண்டவரும் ஆகிய ஸ்ரீரங்கநாதனை வணங்கி இந்த மாயக்குழியிலிருந்து என்னையும் என் குடும்பத்தாரையும் காப்பாற்றவேண்டும் என்று வேண்டிக்கொண்டு, சங்க தீர்த்தத்தை வணங்கி ஆங்குள்ள வடவிருட்சத்தையும் விஷ்வக்ஸேனரையும், துவாரபாலகரையும், ஸ்ரீ வசிஷ்ட முனிவரையும் வணங்கி ஸ்ரீரங்கநாயகியையும் ஸ்ரீரங்கநாதனையும் தியானம் பண்ணிக்கொண்டே சந்திரதீர்த்தத்தில் எல்லாரையும் ஸ்நானம் செய்வித்தான்.

பின்னர் ஆலமரத்தைப் பிரதட்சண நமஸ்காரம் செய்து பஞ்சு, கம்பளம் இரும்புத்துண்டு பசு முதலியவற்றைத் தன் புத்திரனைக் கொண்டு தானம் செய்வித்தான். இவ்வாறு பத்துத் தினங்களாகக் காலையில் மகாபிஷேகங்களும் சிறந்த நைவேத்தியங்களும் செய்து மத்தியானம் சந்திரதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து ஆயிரம் பிராம்மணர்களுக்கு அன்னதானமும் அளித்துவந்தான். ராஜகுமாரனும்

பிராம்ண சந்தர்ப்பண விசேஷத்தாலும் காவேரியிலுள்ள சங்க தீர்த்த ஸ்நான விசேஷத்தாலும், ஸ்ரீரங்கநாதனது சேவையினாலும் ரோகம் நிவர்த்தியாகிப் பொன்மயமான தேகமுள்ளவனாய் விளங்கினான்.

## 6. விக்ரமன் தவம்புரிதல்.

சந்திரகீர்த்தி தன்னுடைய குமாரன் ரோகம் நீங்கி இன்பத்தைப் பெற்ற அளவிலே தானும் அடங்கா மகிழ்ச்சி கொண்டு ஸ்ரீரங்கநாதன் மகிமையை உணர்ந்து சங்கதீர்த்தத்தின் மகிமையை வியந்து ஆனந்தக்கண்ணீருடன் அந்தச் சங்கதீர்த்தத்தில் தன்மனைவி மக்களுடனும் ஆடிப்பாடித் துதித்தான். ஸ்ரீரங்கநாதனிடம் ஆலயத்தை ஜீர்ணோத்தாரணம் செய்ய அனுமதி பெற்றுக்கொண்டு விமானம், கோபுரம், கர்ப்பக்கிரகம், பிரகாரம், தீர்த்தமண்டபம் முதலியவற்றைப் புதிதாக நிர்மாணித்தான்.

பின்னர் வசிஷ்டரால் செய்யப்பட்ட திருவிழாவைத் தானும் வேதசாஸ்திரங்கள் கோஷிக்கவும், நானாவித வாத்தியங்கள் முழங்கவும், பூதானம் கோதானம் இவைகளைச் செய்தும், பிராம்ண சமாராதனை நடாத்தியும் ஒன்பதுதினம் வாஹனாதி பல்லக்குகளில் பெருமாளை எழுந்தருளச்செய்து ரதோற்சவத்தையும் சிறப்பாக நடத்தி வைகாசிமாதம் சிரவணநட்சத்திரத்தில் சங்கதீர்த்தத்தில் தீர்த்தோற்சவத்தையும் நடத்தினான். தீர்த்தத்தில் தன்மனைவி மக்களுடன் ஸ்நானம் செய்து சிம்சுமார சாந்தி செய்தும் லக்ஷ்மிநாராயணப்ரதிமையைத் தானம் செய்தும் திருவிழாவைச் சிறப்பாக நடத்தினான். இந்த உற்சவம் எப்போதும் நடைபெறுவதற்காகப் பத்துக்கிராமத்தையும் நித்திய பூஜைக்காகப் பத்துக் கிராமத்தையும் மானியமாக ஒதுக்கி ஏற்பாடு செய்தான். மறுபடியும் தன் மனைவி மக்களுடனும் பெருமாளை வணங்கித் தன் தேசம் போய்ச்சேர்ந்தான்.

சௌனகர் சூதமுனிவரைப் பார்த்து ஸ்ரீரங்கநாதருடைய க்ஷேத்திரவைபவங்களைக் கேட்டு மகிழ்ந்தோம். அந்த க்ஷேத்திரத்தில் சங்கதீர்த்தம் எப்படி உண்டாயிற்று? அதன் வைபவங்களையும் சொல்லியருளவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். சூதர் சொல்லுகின்றார்.

முன் காலத்தில் நமுசி என்னும் அரசனுக்கு விக்ரமன் என்னும் ஒரு புத்திரன் இருந்தான். அவன் மிக்க பலசாலி. விக்ரமன் சகல தேவர்களையும் வெல்லும்படியான அவ்வளவு பலத்

தைப் பெறக் கருதிக் கோகர்ணம் என்னும் சிவ க்ஷேத்திரத்தை அடைந்து பார்வதி நாதனுகிய பரமசிவனைக்குறித்து நூறு வருஷம் தவங்கிடந்தான். பரமசிவனே இவன் கண்ணுக்குப் புலப்படாமலே கைலாயத்தை அடைந்தார். சிவபெருமான் பிரத்யக்ஷமாகாமையால் கோகர்ணத்தை விட்டு மாத்ருபூதேஸ்வரம் அடைந்து (வேலூர்க்கு மேற்கில் உள்ளது) எண்ணுபிர வருடம் தவம் புரிந்தான். மறுபடியும் சித்திக்காமையால் விக்ரமன் விருத்தாசலம் என்னும் சிவக்ஷேத்திரத்திற்குச் சென்று பின்பாகத்தில் ஓர் ஆழமான குழி வெட்டி அதனுள் இருந்துகொண்டு பதினுயிரம் வருஷம ஆயுளுடன் இருப்பதற்காகத் தவம் புரிந்தான். இதை அறிந்த தேவர்கள் எல்லாரும் மிகப்பயந்து பிர்ம்மாவிடம் சென்று விக்ரமன் தான் அழியாதிருப்பதற்காகக் கொடிய தவம் செய்து வருகிருன். அவனை இப்போதே வதம் பண்ணிவிட வேண்டுமென்று விண்ணப்பித்தார்கள்.

---

## 7. விக்ரமன் வதம்.

தேவர்கள் முறையிட்டுக்கொண்டவுடன் பிரமதேவர் தேவர்களைப்பார்த்து "விக்ரமனே மிகவும் துஷ்டன்; பலசாலியும் ஆவான். அவனைக்கொல்லுவதென்பது முடியாத கார்யம். அவனைக் கொல்ல வேண்டுமானல் சர்வரக்ஷகனுகிய ஸ்ரீமந்நாராயணனைத் தவிர வேறு யாருமிலர். ஆகையால் நாமெல்லோரும் ஸ்ரீமந்நாராயணனிடம் போவோம்" என்று சொல்லிச் சகலதேவர்களோடும் புறப்பட்டுத் திருப்பாற்கடலில் பள்ளிகொண்டிருக்கும் ஸ்ரீமந்நாராயணனிடம் போய்க் கைகூப்பி வணங்கிஸ்தோத்திரஞ்செய்தார்கள்.

தேவர்கட்கும் தேவனே, சரணமடைந்தவரைக் காக்கும் கருணுநிதியே என்னை ரக்ஷிக்கவேண்டும்; திதிபுத்திரனை விக்ரமன் தேவர்களையெல்லாம் அழித்து நாசமாக்குவதற்காகக் கடூரமான தவத்தைச் செய்து வருகிருன். மனிதர்களால் செய்யப்படும் யாகத்தை அழித்துத் தேவர்களுக்கு அவிர்ப்பாகம் கிடைக்காதபடி இடையூறு செய்கிருன். தேவர்களுக்கும் இனி பலமில்லாமல் போய்விடும். அப்படிப்பட்ட கொடிய விக்ரமனைச் கொல்வதற்குத் தங்களைத்தவிர பதினுன்கு லோகங்களிலும் வேறு யாரும் இலர். ஆகையால் அவனை இப்போதே சங்காரம் செய்து எங்களைக் காப்பாற்றவேண்டும் என்று முறையிட்டனர். உடனே விஷ்ணுவானவர் பிர்மா முதலிய தேவர்கள் விக்ரமனைப்பற்றிச் சொன்ன முறையீட்டைக்கேட்டு, தேவர்களே "அஞ்சவேண்டாம்

நான் இப்போதே விருத்தாசலத்தில் குகைக்குள் இருக்கும் பராக்கிரமமுள்ள விக்ரம அசுரனைச் சங்காரம் பண்ணிவிடுகிறேன். இதுவே என்னுடைய குறிக்கோளாகும்," என்று உத்தரவிட்டார்.

**பாஞ்சசன்னியத்தை ஏவுதல் :—** உடனே விஷ்ணுவானவர் தன்னுடைய கையிலிருக்கும் மகாவீர்யமுள்ள பாஞ்சசன்னியம் என்னும் சங்கத்தை விக்ரம அசுரனை அதம்பண்ணும்படி ஏவினார். உடனே சங்கமானது கோடிசூர்யப் பிரகாசத்துடன் வெகுவேகமாய்ச் சென்று குகைக்குள் புகுந்து அசுரனைத் தகித்தது. விக்ரமனோ சங்கத்தில் ஜ்வாலை சகிக்கமுடியாமல் பூமியில் சுரங்கம் பண்ணிக்கொண்டு நுழைந்து ஆக்னேயமாய்த் தோண்டிக்கொண்டே இரண்டு யோசனைதூரம் வந்து வடரங்கத்தில் ஆலமரத்தின் அருகில் பூமியைப் பிளந்துகொண்டு வெளியில் கிளம்பி ஓடினான். பாஞ்சசன்னியமும் மிகுந்த சப்தத்துடன் அவனைத் துரத்திக்கொண்டே வந்தது. அசுரனும் தன்னைத் துரத்திக்கொண்டு வந்த சங்கத்தோடு எதிர்த்து யுத்தம் செய்தான். பாஞ்சசன்னியமும் அந்த அசுரனை ஒரு முகூர்த்த நாழிகைக்குள் கொன்றது. அசுரனும் உயிர் நீங்கிக் கீழே விழுந்தான். தேவர்கள் எல்லோரும் மகிழ்ச்சிகொண்டவர்களாய் அசுரன் பூமியைப் பிளந்து எழுந்த இடம் முதலியவற்றைப் பார்க்க வடரங்கம் வந்து சேர்ந்தார்கள்.

---

## 8. கலாதரன் பேறு பெற்றது.

தேவர்கள் எல்லாரும் பாஞ்ச சங்யத்தின் பிரபாவத்தைப் பார்த்து ஆச்சர்யமடைந்து பாஞ்சசங்யமே "உனக்கு நமஸ்காரம், நீ சமுத்திரத்தில் முன்பு தோன்றினாய்; விஷ்ணுவின்கையில் தரித்திருக்கும் பெருமை பெற்றாய்; சர்வதேவர்களாலும் வணங்கப்படுகிறாய்" என்று பலவாறாகப் பிரார்த்தித்தார்கள். சங்கமானது விஷ்ணுவின் கையில் போய்ச்சேர்ந்தது. விஷ்ணுவானவர் சங்கத்தை அலம்புவதற்காகக் கங்கை முதலான சகல நதிகளையும் வரவழைத்து நீங்கள் சந்திரசூரியன் உள்ள அளவும் இங்கேயே இருக்கவேண்டுமென்று உத்தரவிட்டார்.

**சங்க தீர்த்த மகிமை :—** விஷ்ணுவின் கட்டளைப்படி எல்லா நதிகளும் ஒன்று சேர்ந்தன. விஷ்ணுவானவர் அசுரனைச் சம்காரம் செய்த சங்கத்தை அலம்பிக் கையிலெடுத்துக்கொண்டு

தேவர்களை இந்தப் பரிசுத்தமான சங்கதீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணும்படி உத்தரவிட்டார். பெருமாள் கட்டளைப்படி எல்லா தேவர்களும் உடனே ஸ்நானம் செய்தார்கள். அன்றுமுதல் இப்பள்ளமானது சங்கதீர்த்தம் என்று வழங்கி வருகிறது.

விஷு புண்ணியகாலத்திலும் அயன புண்ணியகாலத்திலும் திலதர்ப்பணம் செய்கின்றவர்கள் தங்களுடைய பிதுர்க்களை விஷ்ணுவின் சரணத்தை அடையும்படி செய்கின்றார்கள். விஷ்வக்சேனர் முதலானவர்களை வணங்கிச் சங்கதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து பிதுர்க்களைக் குறித்து ஆலமரத்தடியில் சிரார்த்தம் செய்கிறவர்கள் கங்கையில் கோடி சிரார்த்தம் பண்ணின பலனை யடைகிறார்கள். இதில் சந்தேகமே இல்லை. இன்னும் வாதம், பித்தம், ரணம், குஷ்டம், உஷ்மாதம், அபஸ்மாரம் முதலான ரோகமுள்ளவர்களும் நவக்கிரக பீடையுள்ளவர்களும் சங்க தீர்த்தத்தில் மூன்றுமாதம் ஸ்நானம் செய்து ஸ்ரீரங்கநாதனை வணங்கிச் சர்வ ரோகங்களும் சர்வ பீடைகளும் நிவாரணமாகிச் சுகமடைகிறார்கள். ஸ்ரீரங்கநாதனைத் தாமரை மலர், நீலோத்பல மலர், செண்பக மலர், மல்லிகை மலர் இவற்றால் பூஜிக்கின்றவர்கள் சகல பாபங்களிலிருந்தும் நீங்கிப் பெருமாள் திருவடியை அடைகின்றார்கள்.

**விஷ்ணுகீர்த்தியின் கொடுமை:—** முன்னொரு காலத்தில் விதேக நகரில் விஷ்ணுகீர்த்தி என்ற ஒரு பிராமணன் இருந்தான். அவன் சகல சாஸ்திரங்களையும் அறிந்தவன். வைஷ்ணவ ஆசாரம் உடையவன். அவனுக்குக் கலாதரன் என்ற ஒரு புத்திரன் இருந்தான். அவன் சங்கீதத்தில் மகாவித்வான். இதர சாஸ்திரங்களையும் அறிந்தவன். ஆயினும், நித்ய கர்மாக்களைச் செய்யாமலும் நல்ல ஜனங்களைத் தூஷித்தும் கபடபுத்தி உள்ளவனாய் இருந்தான். எப்போதும் வெற்றிலை போட்டுக்கொண்டு அந்நிய ஸ்திரீகளிடத்தில் சல்லாபம் செய்வான். மாதாபிதா, மனைவி இவர்களை இம்சித்து தம் வீட்டிலுள்ள எல்லாப்பொருள்களையும் அபகரித்து அன்னியஸ்திரீகளுக்குக் கொடுப்பான். தன்னுடைய மனைவி அழகுள்ளவளாயும், தன்மேல் பிரியமுள்ளவளாயும் இருந்தபோதிலும் அவளைத் தான் விரும்பாமல் ஊர் ஊராகத் திரிவான். இன்னும் அழகுள்ள தாழ்ந்த ஜாதிப் பெண்களையும் காதலிப்பான். ஆகவே இவன் தன் வாழ்க்கையில் செய்த பாபங்கள் எண்ணில் அடங்கா.

**கலாதரன் வடரங்கம் செல்லல்:—** இவன் இவ்வாறு திரிந்துகொண்டிருக்கும்போது காவேரி தீரத்தை அடைந்து நாகேச ஸ்தலம் போய் (சிதம்பரம்) ஹேமாவதி என்னும் ஒரு

தாசியுடன் சல்லாபம் பண்ணிக்கொண்டிருந்தான். ஒரு நாள் ஹேமாவதி அந்த விடபுருஷனைப் பார்த்துப் பிராமணா, இங்கிருந்து இரண்டு யோசனைதூரம் கிழக்கே வடரங்கம் என்று ஒரு புண்ணிய ஸ்தலம் இருக்கிறது. அங்கே ஒரு கன்னிகை இருக்கிறாள். அவள் அழகில் ஊர்வசி, மேனகை முதலானவர்களை ஒத்தவள். தேவகன்னிகையே பூலோகத்தில் வந்தாள் என்று கேள்விப்பட்டேன். ஆகையால் உம்மோடுகூட அவளைப் பார்க்க விரும்புகின்றேன். நீர் சங்கீத வித்வான் ஆகையால் உம்மை அவள் கண்டவுடன் பூஜைபண்ணுவாள். அப்படிப் பட்டவளை நாம் கட்டாயம் பார்க்கவேண்டுமென்று சொன்னாள். உடனே கலாதரன் என்னும் பிராமண விடனும், "அப்படியானால் ஹேமாவதி, நீ எங்கே போனாலும் உனக்கு தாசன்போலத் தொடர்ந்தே வருவேன். உன்னை விட்டு ஒரு க்ஷண நேரமும் பிரிந்திருக்கமாட்டேன் இது சத்தியம்" என்று சொன்னான். உடனே ஹேமாவதியானவள் கலாதரன் என்னும் விடபுருஷனுடன் வெகு உத்ஸாகத்துடன் புறப்பட்டு வடரங்கம் என்னும் க்ஷேத்திரத்திற்கு வந்து சேர்ந்தாள் வடாரண்யம் வந்ததும் கலாதரன் ஆங்கு வந்திருக்கும் சங்கீதம், நாட்டியம் முதலான கலைகளில் திறமைமிக்க கன்னிகாஸ்திரீயைத் தன்னுடைய சங்கீதத் திறமையால் சந்தோஷப்படுத்திச் சிலநாள் அங்கேயே தங்கியிருந்தான். கன்னிகாஸ்திரீயும் அந்த விடபுருஷனையும் அவனுடன் வந்த ஹேமாவதியையும் அன்னபானாதிகளால் வேண்டியவாறு உபசரித்து வந்தாள்.

**கலாதரனைப் பாம்பு தீண்டல்:—** இவர்கள் இவ்வாறு வாசம்பண்ணிக்கொண்டிருக்கையில் மகோத்சவத்தில் நடைபெறும் தீர்த்தோத்ஸவப்புண்ணியகாலம் வந்தது. அப்போது கலாதரன் அந்த இரண்டு ஸ்திரீகளுடன் மகா புண்ணிய தீர்த்தமாகிய சங்க தீர்த்தத்தில் பக்தியுடன் ஸ்நானம் செய்து ஆங்குள்ள ஆலமரத்தையும் வலம்வந்து ஸ்ரீரங்கநாதனைச் சேவிப்பதற்கு ஆலயத்திற்குப் போனான். போனவுடன் ஸ்ரீரங்கநாதனது படுக்கையாக உள்ள ஆதிசேஷனுடைய வம்சத்தில் தோன்றிய பாம்பு ஒன்று கலாதரனைக் கடித்துவிட்டது. விடபுருஷனும் பாம்பு கடித்தவுடனே உயிர் நீத்தான். உடனே யமதூதர்கள் இவனைத் தர்மராஜாவிடம் கொண்டுபோவதற்காக வந்துசேர்ந்தார்கள். அப்போது விஷ்ணுதூதர்கள் எமதூதர்களைத் தூரத்தில் விரட்டிவிட்டு கலாதரனை விஷ்ணுவின் இரதத்தில் ஏற்றி வைகுண்டத்திற்கு அழைத்துப்போவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்கள். அப்போது யமதூதர்கள் விஷ்ணு தூதர்களைப் பார்த்து 'மகாபுண்

ணிய சாலிகளே, நியாயம், அநியாயம் எல்லாம் அறிந்தவர்களே, நீங்கள் இவனை விஷ்ணு சன்னதிக்கு அழைத்துப்போவது நியாயமா? இவன் ஜன்மா எடுத்ததுமுதல் மகா பாபியாகவே. விளங்கிஞன்; மிகவும் துஷ்டன்; அந்நிய ஸ்திரியைக் காதலிப்பவன். புண்ணியக் காரியங்களைச் செய்தே அறியான். இப்படிப்பட்ட மகா பாவியை நீங்கள் அழைத்துப் போவது எவ்விதத்திலும் பொருந்தாது" என்று சொன்னார்கள்.

உடனே விஷ்ணுதூதர்கள் யமதூதர்களைப்பார்த்து நீங்கள் தர்மத்தின் நுட்பத்தை யறியாதவர்கள். இவன் கொடிய பாவங்களையே செய்திருந்த போதிலும் பாவங்களிலிருந்து விடுபட்டவனுகிவிட்டான். இதில் சந்தேகமேயில்லை. ஸ்ரீ ரங்கநாதனுடைய சன்னதியில் விளங்கும் சங்க தீர்த்தத்தில் ஸ்நானம் செய்த எவரும் வைகுண்டவாசியாவார்கள் என்று சொல்லிக்கொண்டே அவனை விஷ்ணு இரதத்தில் ஏற்றிக்கொண்டு வைகுண்டம் போய்ச் சேர்ந்தார்கள்.

இவ்வாறு சூதமகா முனிவர் வடரங்க க்ஷேத்திரத்தின் மகிமையை விஸ்தாரமாய்ச் சொன்னதும் சௌனகாதி முனிவர்கள் மகிமையெல்லாம் கேட்டு மனமகிழ்ந்து இப்படிப்பட்ட க்ஷேத்திரம் ஈரேழு லோகத்திலும் இல்லையென்று சொல்லி உடனே அந்த க்ஷேத்திரத்திற்குப் போகவேண்டுமென்ற எண்ணத்தோடு வடாரண்யம் வடாரண்யம் என்று சொல்லிக்கொண்டே சூதமுனிவரை வலம் வந்து வணங்கி உத்தரவு பெற்றுக்கொண்டு புறப்பட்டார்கள். வடாரண்யம் என்னும் க்ஷேத்திரத்திற்கு வந்து சங்கதீர்த்தத்தையும், சந்திர தீர்த்தத்தையும், வடவிருட்சத்தையும் பார்த்து ஆங்கு சேஷ சயனனுக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீரங்கநாதனை வணங்கிப் பேறு பெற்ஞர்கள். ஸ்ரீரங்கநாதன் வீற்றிருக்கும் இடமெல்லாம் ஸ்ரீஜம்புநாதரும் எழுந்தருளியிருப்பார் ஆதலின் இது ஒரு புண்ணிய க்ஷேத்திரம் என்று சொல்லிக்கொண்டே சாஸ்திர விதிப்படி ரங்கநானைப் பூஜித்தார்கள். இந்தச் சரித்திரத்தைச் சொன்னவருக்கும் கேட்பவருக்கும் இம்மையின்பமும் மறுமையின்பமும் சித்திக்கும்.

சுபம்.

வடரங்க புராணம் முற்றிற்று.

ஸ்ரீ

ஓம் நாராயணாய நம :

# ஆழ்வார் திருமொழிகள்.

## முதல் திருவந்தாதி.

ஒன்றும் மறந்தறியேன் ஓதநீர் வண்ணனைநான்
இன்று மறப்பனோ? ஏழைகாள்!—அன்று
கருவரங்கத்துள் கிடந்து கைதொழுதேன் கண்டேன்
திருவரங்க மேயான் திசை.

## திருமாலை.

குடதிசை முடியை வைத்துக் குணதிசை பாதம் நீட்டி
வடதிசை பின்பு காட்டித் தென்றிசை யிலங்கை நோக்கிக்
கடல் நிறக் கடவுளெந்தை யரவணைத் துயிலுமாகண் (டு)
உடலெனக் குருகு மாலோ என்செய்கே னுலகத் தீரே.

## பெருமாள் திருமொழி.

இருளிரியச் சுடர்மணிக ளிமைக்கும் நெற்றி
இனத்துத்தி யணிபணமா யிரங்க ளார்ந்த
அரவரசப் பெருஞ்சோதி யனந்த னென்னும்
அணிவிளங்கு முயர்வெள்ளை யணையை மேவி
திருவரங்கப்பெருநகருள் தெண்ணீர்ப் பொன்னி
திரைக்கையா லடிவருடப் பள்ளி கொள்ளும்
கருமணியைக் கோமளத்தைக் கண்டுகொண் (டு) என்
கண்ணிணைக ளென்றுகொலோ களிக்கு நாளே.

## பெரியாழ்வார் திருமொழி.

துப்புடையாரை யடைவதெல்லாஞ் சோர்விடத்துத்துணையாவ ரென்றே
ஒப்பிலேனாகிலும் நின்னடைந்தே னானைக்கு நீயருள்செய்தமையால்
எய்ப்பென்னை வந்து நலியும் போதங்கேது நானுன்னை நினைக்க மாட்டேன்
அப்போதைக் கிப்போதே சொல்லிவைத்தே னரங்கத் தரவணைப்
[பள்ளியானே

## திருச்சந்த விருத்தம்.

வெண்டிரைக் கருங்கடல் சிவந்துவேவ முன்னொர்நாள்
திண்டிறற் சிலைக்கை வாளி விட்டவீரர் சேருமூர்
எண்டிசைக் கணங்களும் இறைஞ்சியாடு தீர்த்தநீர்
வண்டிரைத்த சோலைவேலி மன்னுசீ ரரங்கமே.

## நாச்சியார் திருமொழி.

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரிநீர்
செய்ப்புரள வோடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்றார்க்கும் எய்தாது நான்மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப் பொருளும் கொண்டாரே.

## பெரிய திருமொழி.

மாகமாநிலம் முழுதும் வந்திறைஞ்சும்
மலரடிகண்ட மாமறையாளன்
தோகை மாமயி லன்னவரின்பம்
துற்றிலாமையில் அத்த! இங்கு ஒழிந்து
போகம் நீயெய்துபின்னும் நம்மிடைக்கே
போதுவாயென்ற பொன்னருள் எனக்கும்
ஆகவேண்டுமென்று அடியிணையடைந்தேன்
அணிபொழில் திருவரங்கத்தம்மானே!

## பெரிய திருமொழி.

குலந்தரும் செல்வம் தந்திடும்
அடியார் படுதுயராயின வெல்லாம்
நிலந்தரஞ் செய்யும் நீள்விசும் பருளும்
அருளொடு பெருநிலமளிக்கும்
வலந் தரும் மற்றுந் தந்திடும்
பெற்ற தாயினும் ஆயின செய்யும்
நலந்தருஞ் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாராயணா வென்னும் நாமம்.

## தாயார் துதி.

(அருட்பா)

உலகம் புரக்கும் பெருமான்றன் உளத்தும் புயத்தும் அமர்ந்தருளி
உவ்வகை யளிக்கும் பேரின்ப உருவே எல்லா முடையாளே
இலகஞ் செறிவா ணுதற்கரும்பே தேனே கனிந்த செழுங்கனியே
தெவிட்டா தன்பர் உளத்தினுள்ளே தித்தித்தெழுமோர் தெள்ளமுதே
மலகஞ் சுகத்தேற் கருளளித்த வாழ்வே என்கண் மணியே என்
வருத்தந் தவிர்க்க வரும்குருவாம் வடிவே ஞான மணிவிளக்கே
சலகந் தரம்போற் கருணைபொழி தடங்கண் திருவே கணமங்கைத்
தாயே சரணம் சரணமிது தருணம் கருணை தருவாயே.

## சீர்காழி வித்வான் திரு D. சுந்தரேச ஆச்சாரியார் அவர்களால் இயற்றப்பெற்றது.

## ஸ்ரீ வடரங்கநாயகர் பதிகம்.

உலகெலாம் புரக்கும் நாதனே உயிர்க
ளுய்ந்து நன்னெறியினைப் பெறவே
இலகவ தார மூர்த்தமாய்த் தோன்றி
இயற்று நின்னருளினை மறவேன்
நிலமிசைப் பிறந்தார் பெறுபயன் தன்னை
நினைத்துனை வணங்குமெற்கருள் வாய்
வலம்வரு பொன்னி வளமிகு செந்நெல்
வளர்வட ரங்கமா தவனே.

தென்னரங் கத்தே துயில்கொணின் கோலச்
சேவையை ஈங்குளார் காணத்
தன்னரு ளதனல் காட்டுநின் தகவைத்
தாழ்வினும் வாழ்வினும் மறவேன்
உன்னடிப் போதென் னுளத்தடத் தலர
ஓங்கரு ளுதிப்பதெந் நாளோ
பொன்னியங் கரையிலறி துயி லென்றும்
புரிவட ரங்கமா தவனே.

மானுடப் பிறவி எடுத்துமுன் பாத
மகிமையை அறிந்திலேன் இன்னும்
ஊனுட லின்ப மொன்றையே கருதி
யுயிர்பெறு மின்பம துணரா
யானிட ரொழிந்துன் திருவடிப் பேற்றை
அடையுமா அருளினைப் புரியாய்
வானிடத் தவரும் வந்தடி போற்ற
வாழ்வட ரங்கமா தவனே.

குஞ்சர மோர்கால் மூலமே என்னும்
கூக்குரல் கேட்டவப் போதே
அஞ்சலென் றபயந் தந்துகாத் தருள்நீ
ஐம்புலக் கராவினல் வாடித்
தஞ்சமே புகுந்துன் பேர்பல காலும்
சாற்றியும் அருள்கில என்னே
பஞ்சரங் கத்துள் விஞ்சிய பதியாப்
பகர்வட ரங்கமா தவனே.

ஒருவரம் பின்றி உலகினி லுழல்வே
னுன்னடிப் புகலெனக் கொண்டேன்
கருவரங் கினியான் மருவிடா வகையிற்
கருணைசெய் தாண்டருள் புரிவாய்
பெருவரம் பெறுகா விரியடி வருடப்
பிரசனர வணையினில் துயிலும்
திருவரங் கமெனப் பொலிதரு நகராய்த்
திகழ்வட ரங்கமா தவனே.

பிறந்த நாட்டொடங்கி மறந்திடும் பெற்றிப்
பேதை யேன்தனை நெறிப்படுத்திச்
சிறந்ததெய் வீகம் பொலிந்திட எளியேன்
சிந்தையி லிருந்துனை என்றும்
மறந்திடா வரமீந் தினிப் பிறவாத
வாழ்வையுந் தந்தெனை யாள்வாய்.
அறந்தரு சிந்தை முனிவரர் போற்ற
அமர்வட ரங்கமா தவனே.

மட்டிலா ஆசை வலையினிற் சுழல்யான்
மருவுநின் னடித்துணை பிடித்தேன்
எட்டுணை யளவு பக்திகொள் பவர்க்கு
மிணையிலாப் பதந்தரு நீயென்
மட்டிலே அருளா திருப்பது மென்ன
மாயமோ அறிந்தருள் புரிவாய்
எட்டெழுத் தாய மந்திரப் பொருளே
எழில்வட ரங்கமா தவனே.

வீணிலே யுழன்று மானுட மறியா
வெய்யவன் தனக்கு நீ இரங்கித்
தாணிழற் காட்டித் தண்ணரு ளூட்டிச்
சார்ந்திடு மிருவினை ஓட்டிப்
பேணுநின் னடியர் குழாத்துடன் கூட்டும்
பெறலரும் பேறெனக் கருள்வாய்
மாணுருக் கொண்டு வானுற ஓங்கி
வளர்வட ரங்கமா தவனே.

எங்குமே வியாபித் திருக்குநா ரணனே
எளியவ னுளத்துநீ மேவி
வெங்கலி யதனாற் பிணியினால் பகையால்
வெருவியான் பேதுறும் போது
சங்குசக் கரங்கோ தண்டம்வாள் கதையுந்
தாங்கி முன்னின்று காத்தருள்வாய்
பொங்குறும் வடவா லிலையணை துயின்று
பொலிவட ரங்கமா தவனே.

இம்பரில் பிறவிக் கடலினை நீந்த
இணையிலாத் துணையென உன்னை
நம்பியே அடைந்தேன் நின்னடிப் புணையை
நல்கியீங் கெனக் கருள்புரிவாய்
அம்புவி யதனிற் காத்திடுந் தேவென்
றியாவரும் போற்றிடும் தேவே
ஜம்புகேச் சுரனார் தம்மக மேவச்
சார்வட ரங்கமா தவனே.

---

ஸ்ரீ அம்பாள் பிரஸ், சீர்காழி.